விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 15 ஜுல்கஜ் 3 இதழ் 198
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 31-8-84

## மல்லாகம் சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் அண்மையில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்த பொதுமக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கத்தவறியமைக்காக, மல்லாகம் மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் அடுத்த வாரம் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற அறையொன்றில் சட்டத்தரணிகள் சங்கம் நேற்றுக் கூடி மேற்குறிப்பிட்ட தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

வழக்கறிஞர் சங்கத்தலைவர் திரு. எம். கே. சுப்பிரமணியம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

சுமார் ஐம்பது சட்டத்தரணிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் செப்டம்பர் 3-ம் திகதி தொடக்கம் 7-ம் திகதிவரை (இருநாட்கள் உட்பட) தொடர்ந்து நீதிமன்றத்துக்குத்தாங்கள் செல்வதில்லை என்று மல்லாகம் மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகள் தீர்மானித்ததாகத் தெரிவித்தனர்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கரணவாய் தெற்கு அச்சுவேலி, சுன்னுகம், யாழ்ப்பாணம், மன்னர் ஆகிய இடங்களில் பொதுமக்களின், உயிருக்கும், உடைமைகளுக்

[8-ம் பக்கம் பார்க்க]

# சர்வகட்சி மாநாடு: உண்மை நிலையை ஆராயத் தொடங்கியுள்ளது!'

## புதிய திருப்பம் குறித்து 'அமிர்' தகவல்

(நமது சிறப்பு நிருபர்)

**இனப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பது தொடர்பாகக் கடந்த எட்டு மாதமாக நடைபெற்றுவரும் சர்வகட்சி மாநாடு இப்பொழுது உண்மை நிலையை ஆராயத் தொடங்கியுள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாட்டில் அதிகாரப் பரவலாக்கல் எந்த அடிப்படையில் இருக்கவேண்டுமென்பது குறித்து ஆராயப்பட்டதாகவும் அவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

''எங்களுடைய கோரிக்கை தனிநாடுதான். ஆனால் நாங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய மாற்றுத் திட்டமொன்றை முன்வைத்தால் அதனை மக்கள் மத்தியில் சமர்ப்பிப்போம். எக்காரணம் கொண்டும் எங்களுடைய பிரதேசம் பிரிக்கப்படுவதை அனுமதிக்க மாட்டோம்'' என்று மாநாட்டில் தான் தெரிவித்ததாகவும் அவர் கூறினர்.

நமது நாடு சிறியது என்பதால் மாகாண சபைகளை அமைப்பதில் மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்காது என்று மகா சங்கத்தினர் கருத்துத் தெரிவித்தபோது, சிறிய நாடான சுவிற்சர்லாந்தில் 26

(8ம் பக்கம் பார்க்க)

## காலி முகாமிலிருந்து மேலும் 18 பேர் விடுதலை

## 120 இளைஞர்களின் கடிதங்கள் வந்தன!

(யாழ்ப்பாணம்)

காலி இராணுவ முகாமிலிருந்து மேலும் 18 இளைஞர்கள் நேற்று நண்பகல் யாழ். தேவி மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

விடுதலையாகி வந்த இளைஞர்கள், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களால் தமது பெற்றோருக்கு எழுதுவிக்கப்பட்ட உறையிடப்படாத கடிதங்களையும் கையோடு எடுத்துக் கொண்டு வந்திருந்தனர்.

காலி இராணுவ முகாமில் விசாரணைக் குட்படுத்தப்பட்டிருக்கும் இளைஞர்களால் தமது சுக நலன்கள் குறித்து பெற்றோருக்குத் தெரியப்படுத்தும் கடிதங்களே அவை என்றும், இவ்வாறான 120 கடிதங்கள் கொண்டு வரப்பட்டதாகவும் வல்வை பிரஜைகள்குழு பொரு

(8-ம் பக்கம் பார்க்க)

## மேலும் நால்வர் கைது

(சென்னை)

மீனம்பாக்கம் விமானநிலைய குண்டுவெடிப்பு தொடர்பாக மேலும் நான்குபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய விமானப்படையின் பயிற்சி விமானமோட்டி ஒருவரும் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வன்செயலால் பாதிக்கப்பட்டோருக்கு

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ரூ. 2 லட்சம் நிதிசேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்கென யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பினால் ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 710 ரூபா 94 சதம் பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டுள்ளதாக மாணவர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களிடமிருந்து

[8-ம் பக்கம் பார்க்க]

## பலாலியில் பாடசாலை மூடப்படலாம்

(பலாலி)

சித்திவிநாயகர் பாடசாலை மூடப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

பாதுகாப்புப் படையினரின் பாவனைக்குப் பயன் படுத்தும் நோக்கம் கருதியே இப்பாடசாலை மூடப்படலாம் எனக் கல்வித் திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

மேற்படி பாடசாலை சுவீகரிக்கப்படும் பட்சத்தில் இங்கு பயிலும் மாணவர்கள் வேறு பாடசாலைக்கு மாற்றப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## பிரபல கல்லூரிகளில் மாணவர் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாண ')

யாழ்ப்பாணத்திலுள்ள சிலபிரபல கல்லூரிகளுக்கு நேற்று மாணவர்கள் செல்லாததால் வகுப்புகள் வெறிச்சோடிக்கிடந்தன.

குறிப்பிட்ட கல்லூரிகளுக்கு ஆசிரியர்கள் சென்றிருந்தபோதிலும் மாணவர்கள் சமுகமளிக்காததால் பாடசாலை முடியும் நேரம்வரை அவர்கள் இருந்துவிட்டுச் சென்றனர்

கல்லூரி மாணவர்கள் கைது செய்யப்படுவதையும்,

(8ம் பக்கம் பார்க்க)

# "அனுவசியமான முறையில் மாணவர் கைதாகமாட்டார்கள்

## அரச அதிபருக்கு பிரிகேடியர் உறுதி

[யாழ்ப்பாணம்]

மாணவர்கள் அனுவசியமான முறையில் கைது செய்யப்படமாட்டார்கள் என்று யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரி பிரிகேடியர் நளின் செனிவரத்ன உறுதியளித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. மு பஞ்சலிங்கம், பிரிகேடியர் நளின் செனிவரத்னவுடன் தொடர்பு கொண்டு, மாணவர்கள் கைது செய்யப்படுவது குறித்து தமக்கு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதைத் தெரிவித்து இவ்விதச் செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்தே பிரிகேடியர் மேற்படி உறுதிமொழியைத் தெரிவித்தார்

மாணவர்கள் அனுவசியமாகக் கைதுசெய்யப்படமாட்டார்கள் என்றும், இவ்வித அசம்பாவிதங்கள் நடைபெற்றதன் விளைவாக மாணவர் எவரும் பாடசாலை நேரத்தில் கைதுசெய்யப்படும் சந்தர்ப்பத்தில் அம்மாணவர் பயிலும் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பாடசாலை அதிபருக்கு அறிவித்ததன்பின்னரே, மாணவர் கூட்டிச்செல்லப்படுவார் என்றும் பிரிகேடியர் செனிவரத்ன யாழ். அரசாங்க அதிபருக்கு உறுதியளித்துள்ளார்.

இவ்விதமாகக் கைதுசெய்யப்படுவோர் பற்றிய ஏனைய விபரங்கள் நாற்பத்தெட்டு மணிநேரத்துக்குள் அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்படும் என்றும் பிரிகேடியர் தெரிவித்துள்ளார்.


# இன்று நதாகலத் திறப்பு விழா

## பொம்பே ஜெய் சுவீற்ஸ்

(ஹோட்டல் றெலெக்ஸ் கிளை)



இலக்கம்: 226 ஆஸ்பத்திரி வீதி,
யாழப்பாணத்தில்

இன்று 31-8-84 வெள்ளிக்கிழமை அதிகாலை 5-12—6-05மணியளவில் வரும் சிங்க லக்கின சுப முகூர்த்த வேளையில் மேற்படி ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருக்கின்றோம்.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் இன்முகத்துடன் அழைக்கின்றோம்.

பொம்பே ஜெய் சுவீற்ஸ்,
226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஹோட்டல் றெலெக்ஸ்,
340, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 22070

1527

# அரிவித்தல் விளம்பரம்

## விற்பனைக்கு

வண்ணார்பண்ணை, சீனியர் ஒழுங்கையில், கலட்டி அம்மன் கோவிலுக்கு அருகாமையில், வீடு கட்டக்கூடிய தனிக் காணி 3பரப்பு 3குளி உடன்விற்பனைக் குண்டு. தொடர்பு: திருமதி P. மயில்வாகனம், பலாலி வீதிச் சந்தி, உரும்பராய். 1462

8 கிழமை நிரம்பிய பூச்சி அகற்றிய நல்ல இன கறுப்பு-மண்ணிற, கறுப்பு - வெள்ளைய அல்சேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. திரு. கே. திருநாவுக்கரசு, வி. கே. ரி கட்டடம் கொக்குவில் மேற்கு. 1511

1½ பரப்புக்காணி, 403காரும் உதிரிப்பாகங்களும் விற்பனைக் குண்டு. தொடர்பு: ஜோஜ், நிலஅளவையாளர் 480, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1511

ஒரே கைப்பாவிப்பிலுள்ள புதுப்பிக்கப்பட்ட 83 சிறி 2000 இலக்கமுள்ள 125 ஹொண்டா மோட்டார்சைக்கிள் விற்பனைக் குண்டு. இந்திரன், கச்சாய்வீதி, கொடிகாமம். 1514

கொடிகாமம், கண்டிவீதியில் (பிரசவ ஆஸ்பத்திரி வீதி) 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: கந்தையா, சிவநேச கபே, கொடிகாமம். 1513

மாதகலில் இருந்து பெரிய விளானுக்குச்செல்லும் வீதியில் ஏழு பரப்புக் காணி உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு; கே. துரைராசா, முருகன்கோவிலடி பெரியவிளான். 1502

புத்தம்புதிய நாஷனல் குளிர் சாதனப்பெட்டி (National - 2 Doors) விற்பனைக்குண்டு சனிக்கிழமை பார்வையிடலாம் 74, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1484

8 சிறி 7 மொறிஸ் ஒக்ஸ்போட், 7 சிறீ வோக்ஸ்வகென் 1300,, 5சிறீ 1100 மொறிஸ் 1966 மொடல் பிரதி சனிக்கிழமை 9மணி தொடக்கம் 12 மணிவரை வாகனங்களைப் பார்வையிடலாம். குயிக்ஸ் என்ரபிறைசஸ், 533, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1510

தஞ்சாவூர் புதிய வீணைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அகில இலங்கைத் திருமுறை மன்றம், 31/12, சங்கிலியன் வீதி, நல்லூர். 1500

மந்துவில் கேலம் அம்பாள் கோவிலுக்கு சமீபமாகவுள்ள வீடு கட்டக்கூடிய 15 பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். தா. சுவாமிநாதன், பெரியபளை, பளை. 1506

கண்டி ரேட் அரியாலையில் பொன்னம்பலம் வீதிச்சந்திக்கு அருகில் தென்னை, பனைகளுடன் 5 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: ஆ. கெலன் இல: 1, கதிற்றல் வீதி, யாழ்ப்பாணம். 1524

## வாடகைக்கு

சகல வசதிகளும் அடங்கிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு. ஜோஜ், நில அளவையாளர், 480, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 15181

## தேவை

நன்கு அனுபவமுள்ள A/C Mechanics, Auto Mechanics உடன் தேவைப்படுகிறார்கள். அத்தாட்சிப் பத்திரத்துடன் கீழ்க்கண்ட விலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும். M இந்திரன், 75, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 1501

Electric Welding இல் 2வருட அனுபவமுடையவர்கள் தேவை சான்றிதழ்களுடனும், விண்ணப்பத்துடனும், தகுந்த சிபாரிசுடனும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 2-ம், 3-ம் திகதிகளில் நேரில் சமூகமளிக்கவும். டைனமிக் என்ஜினியறிங் லிமிடெட், 43, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 1483

கடைச்சல் வேலை, பெயின்ரிங் பொலிசிங், தளபாடம் பின்னுதல் போன்றவற்றில் அனுபவமுள்ள பெண்கள் உடன்தேவை 06-09-1984க்கு முன் கடித மூலம் அல்லதுநேரில்தொடர்பு கொள்ளவும். 'கிருஷ்ணாஸ்', பருத்தித்துறைவீதி, இருபாலை, கோப்பாய். 1521

## தவறிவிட்டது

21-8-84-இல் கஸ்தூரியார் வீதியில் உள்ள கடை ஒன்றில் பாஸ்போட், U. A. E. திரும்பிச்செல்லும் ரிக்கற், U. A. E. வங்கிக் கணக்குப் புத்தகம், U. A. E. அடையாள அட்டை அடங்கிய கைப்பை தவறிவிட்டது. பாஸ்போட், ரிக்கற் இல்லாததால் மீண்டும் செல்ல முடியாதிருப்பதால் கண்டவர்கள் தயவு செய்து இரண்டையுமாவது ஒப்படைக்கும்படி கேட்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தி மோகனதாஸ், கேணிப்புலம் ஒழுங்கை, மயிலிட்டி. 1516

எனது அடையாள அட்டை (இல: 661171448V) நீர்வேலியில் சென்றகிழமை தொலைந்து விட்டது. கண்டவர்கள் தயவு செய்து சு. சிவகுமாரன், கண்ணாடி தொழிற்சாலை, நீர்வேலியில் ஒப்படைக்கவும். 1509

## பதவி வெற்றிடங்கள்

கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து கோரப்படுகின்றன.

1. கிளை முகாமையாளர் தரம் III
2. விற்பனையாளர் தரம் III
3. கொள்வனவு லிகிதர் தரம் III
4. கணக்கு லிகிதர் தரம் II
5. சேவகர்

யாழ். மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும். சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்கும், சங்க ஊழியர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

காரியாலயத்தில் ரூபா 3/- செலுத்தி விண்ணப்பப்படிவங்களையும் விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 15-09-1984.

பொதுமுகாமையாளர்
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
984-08-28. 1515

## யாருடையது

யாழ்ப்பாணம் 2ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திரு. தர்மரட்ணம் பிரான்சிஸ் போஷியாவின் அடையாள அட்டையை திரு. எஸ். பி. சுப்பையாவும் பாணந்துறை பிரதான வீதியைச் சேர்ந்த திரு. பரஞ்சோதி மகாதேவன், தட்டுவன் கொட்டியைச் சேர்ந்த திரு. நல்லையா நட்ணராஜசிங்கம் வகறக்கராகலிகந்தவத்தாவைச் சேர்ந்த திரு. டிங்கித்த தேவகே சந்ததாச அல்வத்த பண்டாரகெலவத்தாவைச் சேர்ந்த திருமதி. பெற்று பெரிய கறுப்பன் பெருமாள் ஆகியோரின் அடையாள அட்டைகளை திரு. எம். எஸ். ஏ. எம் ஹமீம் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைந்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
## பதவி வெற்றிடம்

பாதுகாப்பு உத்தியோகத்தர் (கீழ்த்தரம்) மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 12-09-1984 வரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவத்தையும் தேவையான விபரங்களையும் எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் சுய விலாசமிடப்பட்ட முத்திரையொட்டிய 23X10 ச. மீ. அளவுடைய கடித உறையொன்றினை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
இலங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
22-08-1984. 1504

## 31-ம் நாள் நினைவஞ்சலி



வல்லிபுரம் நவரத்தினம்

தோற்றம்: 16-7-1916

மறைவு: 31-7: 1984

★

என்றும் அணையாத
தீபமாய்
எமது நெஞ்சங்களில்
சுடர்விட்டொளிரும்
எமது
அன்புத்தெய்வத்திற்கு
எமது கண்ணீர் அஞ்சலி

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்,
பேரப்பிள்ளைகள்

96, கோவில் வீதி,
(கைலாசபிள்ளையார்
கோவில் சந்தி),
யாழ்ப்பாணம். 1498

## மகோற்சவம்
(யாழ்ப்பாணம்)

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் வருடாந்தமகோற்சவம் நாளை முதலாம் திகதி சனிக்கிழமை நண்பகல் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகின்றது.

9 ம் திகதி ஞாயிறு தேர்த் திருவிழாவும், 10 ம் திகதி திங்கள் தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன.

## இன்று உற்சவம்
(நீர்வேலி)

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அடுத்து 9ம் திகதி தேர்திருவிழாவும் 10ம்திகதி தீர்த்த திருவிழாவும் நடைபெற்று 11ம் திகதி பூங்காவனத்துடன் உற்சவம் முடிவடையும்.


உபயோகித்து பழுதடைந்து கீறல் விழுந்து மங்கிய
எவர்சில்வர் பாத்திரங்களை
திருத்தி புதியன போல் மெருகிட்டு வழங்கப்படும்.
உங்கள் தேவைக்கு

**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்,**

257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(1519)

**மலிவு விலையில்**

**HONDA மோட்டார் சைக்கிள்**

H—100—18,500/-

மேற்படி விலைக்குறைப்பு
கையிருப்பு முடியும் வரை மட்டுமே

CANTABIA LTD.,
21, MAIN STREET, JAFFNA.
T'Phone: 24201


## 31 வது நாள் நினைவஞ்சலி

### திருமதி இராசையா நல்லம்மா

தோற்றம்: 6-8-1924 மறைவு: 1-8-1984



எமது அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களைவிட்டு பிரிந்து ஒரு மாத காலமாகி விட்டது ஆனால் உங்களின் அன்பு உள்ளம் எங்களை விட்டு என்றுமே பிரியாது. தங்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இருபாலைச்சந்தி, கோப்பாய். (1451)

## வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் முன்னணி வகிக்கும்
ஓர் தொழில் ஸ்தாபனத்திற்கு
கீழ்வரும் வெற்றிடங்களுக்கு
உடனடியாக ஆட்கள் தேவை,

I PRODUCTION FOREMAN
- (a) ஆகக்குறைந்தது G. C. E. O/L வரை படித்திருக்கவேண்டும்.
- (b) குறைந்தது ஐந்து வருட WORK SHOP அல்லது INDUSTRIAL அனுபவம் இருத்தல் வேண்டும்.
- (C) வயது 25—35க்குமிடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்-
- (D) SHIFT வேலை செய்யவேண்டும்.

II KNITTING MANAGER
KNITTING and FNIISHINGல் ஆகக்குறைந்தது பத்துவருடங்கள் அனுபவமுள்ள KNITTING MANAGER தேவை

III BOOK-KEEPER
- (a) I A A அல்லது அதற்குச்சமமான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- (b) ஆகக்குறைந்தது மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
- (C) வயது 20—25க்குமிடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

அனுபவத்திற்கும் திறமைக்குமேற்ப சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 10-9-84

விளம்பர இல. 1508, C/o ஈழநாடு.

(1508)

# பிரிட்டிஷ்பிரதமர் தட்சர் இலங்கை வரமாட்டார்!

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரெட் தட்சர் இலங்கைக்கு வரமாட்டார்.

அடுத்தமாதம் இலங்கைக்கு வந்து விக்டோரியாத் திட்டத்தைத் திறந்து வைக்கவிருந்தார், ஆனல் இப்பொழுது இலங்கையிலுள்ள நிலைமையில் தம்மால் வரமுடியாதிருப்பதாக அறிவித்துள்ளார்.

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இங்கிலாந்துக்கு விஜயம் செய்த போது பிரிட்டனின் உதவியுடன் நிர்மானிக்கப்பட்ட விக்டோறியா திட்டத்தைத் திறந்து வைக்கும்படி பிரிட்டிஷ் பிரதமருக்கு அவர் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த அழைப்பை பிரிட்டிஷ் பிரதமர் ஏற்றுக்கொண்டு, இலங்கைக்கு அடுத்த மாதம் வருவதற்குச் சம்மதித்திருந்தார்,

இலங்கையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளினல், இப்போது அங்கு இச்சமயத்தில் வருவது உசிதமாக இருக்காது என்று ஜனதிபதிக்கு பிரிட்டிஷ் பிரதமர் தெரிவித்திருக்கிருர்.

தாம் வராதபோதிலும், தமது அமைச்சரவையிலுள்ள சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை விக்டோரியாத் திட்டத்தைத் திறந்து வைப்பதற்கு அனுப்பி வைப்பதாக திருமதி தட்சர் அறிவித்திருக்கிருர்.

பருத்தித்துறையில்

# குடிநீர் விநியோகத் திட்ட வேலை துரிதம்!

(பச்சிலைப்பள்ளி)

அமெரிக்க அரசாங்கத்தின் உதவியுடன் பருத்தித்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் விநியோக வேலை துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பருத்தித்துறை நகரசபைப் பகுதிக்கும், அல்வாயின் ஒரு பகுதிக்கும் வழங்கப்படவிருக்கும் குடிநீர் பருத்தித்துறை கிழக்கிலுள்ள குடத்தனையில் அமைக்கப்படும் கிணறுகளிலிருந்து குழாய்கள் மூலம் கொண்டுவரப்படவிருக்கிறது.

குடத்தனையிலிருந்து பருத்தித்துறைக்கு நீர் கொண்டு செல்வதற்கு நிலத்திற்கு அடியில் குழாய்கள் பொருத்தும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகிறது

இவ் வேலைகளை நேரடியாகக் கவனிப்பதற்காகக் குடத்தனையில் ஓர் அலுவலகமும் இயங்கி வருகிறது.

# "ஆபிரிக்க நெருக்கடிகள் மோசமடைகின்றன'

ஜெனீவா, ஆக. 30

'ஆபிரிக்காவின் நெருக்கடிகள், அக்கண்டத்தின் பொருளாதாரத்தை அழிப்பதோடல்லாமல் ஆபிரிக்காவின் கலாசாரத்திற்கே அபாயத்தை ஏற்படுத்துகின்றன. இதற்கான பொறுப்புக்கள் யாவும் ஆபிரிக்காவை நேரடியாகவும் மறைமுகமாகவும் சுரண்டி வரும் மேலைய தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளையே சாரும்!

ஜெனீவாவில் நடைபெறும் ஐ. நா. பொருளாதார, சமூகக் கவுன்ஸிலின் கூட்டத்தில் கலந்து கொண்ட 54 நாடுகளும் ஆபிரிக்காவின் நிலைமையில் விசேஷ கவனம் செலுத்திய போது, பல பிரதிநிதிகள் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டினர்,

'குறிப்பாக ஆபிரிக்க விவசாயம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது அதன் ஒரு தலைப்பட்சமான வளர்ச்சி, வரட்சி ஆகியவற்ருல் உணவுற்பத்தி பெரிதும் குறைந்து விட்டது, 1982-83-ம் ஆண்டுகளில் விவசாய உற்பத்தி 9·2 சதவீதத்தாலும் மக்கள் தொகை 2·7 சதவீதத்தாலும் உயர்ந்தன. லட்சோப லட்சம் மக்கள் பட்டினி போஷாக்கின்மை ஆகியவற்ருல் வாடுகிருர்கள், தொழில் உற்பத்தி வளர்ச்சி விகிதம் குறைந்து வருகிறது. ஏற்றுமதிக் குறைவால் வெளிநாட்டு வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. காப்பிக்கொட்டை மற்றும் கொக்கோ போன்றவற்றின் விலைகள் குறைக்கப்பட்டதன் விளைவாக ஆபிரிக்க நாடுகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் 220 கோடி டாலர்களாம், மேலைநாடுகளுக்கு ஆபிரிக்க நாடுகள் கொடுக்க வேண்டியிருக்கும் கடன் 15,000 கோடி டாலர்கள், வட்டி விகித அதிகரிப்பினல் நிலைமை மேலும் மோசமாகி வருகிறது' என்று ஐ. நா. பொருளாதாரக் கவுன்ஸில் கூட்டத்தில் பிரதிநிதிகள் ஆபிரிக்காவின் உண்மை நிலையைச் சுட்டிக்காட்டினர்.

# தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் மூடுவிழா?

(கரவெட்டி)

அண்மையில் அச்சுவேலியில் இடம்பெற்ற அசம்பாவிதத்தையடுத்து இங்கு அமைந்துள்ள தொலைத் தொடர்பு தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் மூடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பிரஸ்தாப சம்பவத்தின் போது இந்நிலையம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்தே இதற்கு மூடுவிழா நடைபெற்றுள்ளதாக அறியப்படுகிறது.

யாழ். மாவட்ட தொலைத் தொடர்புப் பரிசோதகர் திரு யோகநாதன் இந்த நிலையத்தை வந்து பார்வையிட்டார்.

இத் தொலைத் தொடர்பு நிலையத்தில் சுமார் 18 துப்பாக்கிச் சூட்டு அடையாளங்கள் காணப்பட்டதாகவும், இதன் யன்னல் உடைக்கப்பட்டுள்ளதாகவும், இங்கு பாவனையில் இருந்த இரு தொலைபேசிகள், 'குறடு' என்பனவற்றைக் காணவில்லை என்றும் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையம் மூடப்பட்டதனல் இப்பகுதியைச் சேர்ந்த 41 தொலைபேசி சந்தாதாரர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

# பாரசீகவளைகுடாவில்தலையீடு?

லண்டன் ஆகஸ்ட் 30,

''பாரசீக வளைகுடாவில் ஆயுதத்தலையீடு மேற்கொள்ளும் திட்டங்களை தட்சர் அரசாங்கம் உருவாக்கி வருகிறது. இப்பிராந்தியத்துக்குப் பெரும் இராணுவப்படைப் பிரிவுகளை அனுப்புவதற்கு வகைசெய்யும் அமெரிக்கத்திட்டங்களுடன் அவை நெருக்கமாக இணைந்துள்ளன, 'என்று ''தபினன்ஸில் டைம்ஸ்'' பத்திரிகை எழுதியுள்ளது.

''பாரசீக வளைகுடாவைத'' தன்னுடைய ஜீவதார நலன்கள்'' மண்டலமாகப் பிரகடனம் செய்துள்ள வாஷங்டன் அப்பிராந்தியத்தில் தனது ராணுவபலத்தைப் பெருக்கி வருகிறது. ''த அமெரிக்கா'' என்ற விமானந்தாங்கிக் கப்பலும் குரூய்சர்களும் நாசகாரிகளும் மற்றும் ஏழு துணைக்கப்பல்களும் அதன் கடற்படைப் பிரிவில் அடங்கும்.

பிரித்தானிய கரைகளுக்கு ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்குத் திட்டங்களை வளர்ப்பதுடன் பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு அதன் கடற்படையை நவீனமாக்குவதற்கான திட்டத்தையும் அங்கீகரித்துள்ளது இந்தநோக்கத்துக்கு 50 கோடிபவுண்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. ''என்றும் தஃபினன்சியல் டைம்ஸ்'' குறிப்பிட்டுள்ளது.

# பொறுப்பாளர் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் உணவுக்களஞ்சியத்திலிருந்து 1644 மூடைகள் மாவு, 38 மூடைகள்சீனி, 58 மூடைகள் அரிசி ஆகியன கையாடப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரின் இணைப்பதிகாரி திரு. ஏ. எஸ் செல்வரத்தினம் மேற்கொண்ட நடவடிக்கையின் பேரிலேயே மேற்படி களஞ்சியத்தில் சோர்வு ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து வந்த திடீர்ப்பரிசோதனைக் குழுவினர் மேற்படி களஞ்சியத்தைப் சோதனையிட்டபோது சுமார் 10லட்சம் ரூபாவுக்கு மேற்பட்டபொருட்களில் சோர்வு ஏற்பட்டுள்ளது தெரியவந்ததாம்.

இக்களஞ்சியத்தின் பொறுப்பாளராக இருந்தவர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர் என்றும் அவர் இப்பொழுது தலைமறைவாகி விட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து புதிய களஞ்சியப்பொறுப்பாளராக ஜனுப் சனூன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்களஞ்சிய பரிசோதனைக்காக ஏற்கனவே சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (மா)

# அமெரிக்காவின் வறுமைநிலை

வாஷங்டன் ஆகஸ்ட் 30,

''1983ம் ஆண்டில் 3 கோடியே 50 லட்சத்திற்கும் அதிகமான அமெரிக்கர்கள் வறுமைக்கோட்டிலும் 900,000 பேர் அதற்குக் கீழேயும் வாழ்ந்தனர். அமெரிக்காவின் கடந்த ஆறு ஆண்டுகளில் இந்தவறுமை, சாதனை நிலையை எட்டியுள்ளது.''

இவ்வாறு இங்குவெளியான புள்ளிவிவரம் ஒன்று கூறுகிறது.

பொருளாதார நிலைமை மேம்பட்டு வருகிறது என்று அமெரிக்க நிர்வாகம் கூறிய போதிலும் சமூக வேலைத்திட்டங்கள் வெட்டிக்குறைக்கப்படுவது நிறுத்தப்படவில்லை. 1981ம் ஆண்டில் 500,000 பேர் வேலையில்லாப் பட்டாளத்தில் சேர்ந்தனர்.

நாலு கோடியே 40 லட்சம் அமெரிக்கர்கள் போஷாக்கின்மையால் வாடுகின்றனர். உணவு முத்திரை பெறும் எவரையும் பட்டினிவிட்டு வைக்கவில்லை. பெரும்பான்மையான வறியமக்கள் லத்தீனமரிக்க வம்சாவளியினர் ஆவர்.

# பிரதமர் இந்திராகாந்தியை ஜெயலலிதா சந்தித்தார்!

(புதுடில்லி)

இந்திய ராஜ்யசபை அங்கத்தவர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேசினர்.

அண்ணதிராவிட முன்னேற்றக்கழகத்தின் ராஜ்யசபைக் குழுவின் துணைத்தலைவரான ஜெயலலிதா அவரைச் சந்தித்துப்பேசிய விடயங்கள் குறித்து அறிவிக்கப்படவில்லை.

# சன சமூக நிலையங்களின் ஒப்பந்த வேலைகள்

(கொழும்புத்துறை)

சனசமூக நிலையங்கள் இனி மேல் அனுமதியின்றி ஒப்பந்த வேலைகளைச் செய்ய முடியாது. என்று யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் அறிவித்துள்ளார்.

சில சனசமூக நிலையங்கள் உள்ளூராட்சித் திணைக்களத்திற்குத் தெரியாமல் ஒப்பந்த வேலைகளைச் செய்து வருவது கண்டுபிடிக்கப் பட்டுள்ளதை தொடர்ந்தே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இம்மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்கள் ஒவ்வோர் ஆண்டும் ஒப்பந்த வேலைகளைச் செய்யும்போது தனது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

# பரிதாப மரணம்

(வவுணதீவு)

கோழியை விற்றுவிட்டு சைக்கிள் திருத்துவதற்கு மட்டக்களப்புக்குச் சென்ற இளைஞரை வலையிறவு வாவி பலிகொண்டது!

பரிதாபகரமாக நீரில் மூழ்கியவர் நாவற்கடுக விஸ்வலிங்கம் (20 வயது) என்னும் விறகு வெட்டியாவர். இவரது சடலம் இரண்டு நாட்களின் பின்னர் மீட்கப்பட்டு, மரண விசாரணையின்பின்னர் விபத்து மரணம என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

அச்சுவேலிசேதமடைந்ததால்

# வயாவிளான் தபால் நிலையத்தில் கூடுகின்றனர்

(மாவிட்டபுரம்)

அச்சுவேலியில் நடந்த அசம்பாவித சம்பவத்தால் அச்சுவேலி தபால் நிலையம் சேதம் அடைந்ததால் வயாவிளான் தபால் நிலயத்தில் ஏராளமானவர்கள் கூடுகின்றனர்.

அச்சுவேலியில் நடந்த சம்பவத்தால் அச்சுவேலி தபால் நிலையம் சேதம் அடைந்ததால் மேற்படி தபால் நிலையம் கடந்தசில தினங்களாக பூட்டப்பட்டுள்ளது.

இதனல் இப்பகுதிமக்கள் அவசர தேவைக்கு தந்தி, கடிதம் அனுப்பமுடியாமல் கஸ்டம் அடைந்து அண்மையில் உள்ள வயாவிளான் தபால் நிலையத்துக்கு சென்று தேவைகளை பூர்த்தி செய்கின்றனர்

வயாவிளான் தபால் நிலையத்தில் கூடும் ஏராளமான மக்களுக்கு நல்லசேவையளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

### மணிவாக்கு

கனவு எதனுல் அமைகின்றதோ, அதனுலேயே நாமும் அமைக்கப்பட்டிருக்கின்றேம். நம்முடைய சிறிய வாழ்வு, தூக்கம் என்பதனேடு சுழன்று உழன்று முடிந்து போகின்றது.

— ஷேக்ஸ்பியர்.

# கைதானவர்களை விடுவிக்க இ. தொ. காங்கிரஸ் முயற்சி

(கொழும்பு)

முல்லைத்தீவு, வவனியா, முருங்கன் உயிலங்குளம், பாவற்குளம் ஆகிய பகுதிகளில் அண்மையில் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்படி இ. தொ. கா. வடபகுதி பொறுப்பதிகாரி திரு. பி. மதுரபிள்ளை இ தொ. கா. தலைவரும் கிராமிய தொழிற்துறைஅபிவிருத்தி அமைச்சருமான திரு. எஸ். தொண்டமானை கேட்டிருக்கிறார்.

சமீபத்தில் மன்னார், வவனியா, முருங்கன், அடம்பன் மாந்தை ஆகிய இடங்களில் சேதமாக்கப்பட்ட கடைகள் சம்பந்தமாகவும் மரணம் அடைந்தவர்கள் சம்பந்தமாகவும் வடபகுதி பொறுப்பதிகாரி திரு, பி. மதுரபிள்ளை அமைச்சர் தொண்டமானை சந்தித்து மேற்காட்டிய இடங்களில் உள்ள நிலையையும் மக்கள் பயந்து வாழ்வதையும் மகஜர் மூலமாக நேரில் எடுத்துக் கூறினர்.

வவனியா முல்லைத்தீவு, முருங்கன், உயிலங்குளம், பாவற்குளம் ஆகிய இடங்களில் காரணமின்றி கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் அவர் அமைச்சரை கோரியுள்ளார். அமைச்சர் இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது.

# நமது நோக்கு

## இலாச்சிக்குள்ளிருக்கும் எலும்புக் கூடுகள்

சமாதானம் வேண்டுமென்று, ஊரவரும், உலகத்தவரும் ஓலமிடுகின்றனர். ஆனுல் அவர்கள் உள்ளத்தைப் பார்க்க முடியுமானுல் ஓங்காளமே எடுக்கும்.

சனநாயகம் என்று கோஷம் போடும் நாடுகளில் ஆட்சியாளரின் உள்ளத்தில் பொங்கியெழுந்து கொண்டிருப்பது போராட்டமும் சஞ்சலமுமேயாம்.

''எனது நாடு, எனது ஆட்சி, எனது கட்சி என்ன வந்தாலும் இவற்றைப் பாதுகாத்தேயாக வேண்டும் சட்டங்கள் இவற்றிற்கே ஆதரவு அளிக்க வேண்டும்!'' இந்தக் கோட்பாடு பல பெற்றிருக்கும் வரைபோர் என்னும் பேரச்சம் உலகையும், நாட்டையும் பீடித்திருக்கும்.

'சட்டத்தின் முன் எல்லோரும் சமம்' என்ற சித்தாந்தத்தின் பலம் பேசுபவர்கள் அதன் பலவீனத்தை மறைத்துவிடுகிறார்கள்.

சட்டம் என்னும் கழுதையை காசு மடக்கமாட்டாதா? செல்வத்தில் மிதக்கின்றவன் எந்தச் சட்டத்தையும் புரட்டவல்ல பாரிஸ்டர் சிங்கத்தைப் பெற முடியாதா? நீதிமன்றத்தில் அம் 'மிருக' மன்னன் எழுப்பும் கர்ச்சனை எந்தச் சட்டத்தையும் தவிடு பொடியாக்குவதை நாம்காணவில்லையா?

காசின்பக்கம் மட்டுமல்ல. பெரும்பான்மையின் பக்கத்துக்கும் நீதிசாயும் பெரும்பான்மையின் வாக்கினுலே சனநாயகம் இங்கு வழும் தமிழ் மக்களுக்கு 'சனி' நாயகமாக மாறிவிட்டது. அடுத்த சனி மாற்றம் எவ்வாறிருக்குமென்பதே இன்றைய விவகாரங்கள் முடிவு கட்ட வேண்டியது.

சுதந்திர இலங்கையின் அரசியலமைப்பு இதுகாறும் கண்டமாற்றங்களை அவதானித்துப் படித்தால் ஆளுங்கட்சிக்கே இந்தநாடு சொந்தமானதென்ற மனேபாவம் தென்படும்.

இன்றைய ஆட்சியில் அரசியலமைப்பு வேண்டிய போதெல்லாம் திருத்தப்பட்டு வந்தது ஆளுங்கட்சியின் மிதமிஞ்சிய பலத்தைக் காட்டுகிறது. அது நாட்டின் பரிபாலனத்துக்கு அத்தியாவசிய மானதென்று கொள்ள முடியாது.

கடந்த ஆண்டில் நடைபெற்ற ஆடிக்கலவரம் ஆறுவது திருத்தத்தைப் பிறப்பித்து தமிழ் மக்களின் வாக்குரிமையை உடனடியாகப் பறித்துவிட்டது.

கடந்த ஆட்சியின் சாபக்கேடு அவசரகாலச் சட்டமென்று பழி கூறிவரும் இன்றைய ஆட்சியாளர் இதனையே மாதம் மாதம் அமுலுக்குக் கொண்டு வருகின்றனர்.

இன்று அவசரகாலச் சட்டம் ஏன் நீடிக்கப்பட வேண்டுமென்று பாராளுமன்றத்தில் விளக்கம் அளிக்கப்படும்போது வடக்கு கிழக்கு பகுதிகளில் நடைபெற்ற வன்செயல் பட்டியல் சமர்ப்பிப்பதே ஒரு கைதேர்ந்த உபாயமாய்விட்டது

எதிர்க்கட்சியினர் அவசரகாலச் சட்டத்தை அப்பகுதிகளிலேயே அமுல் படுத்த வேண்டுமென்று வாதாடுவது நியாயமாகுப.

ஆனுல் உண்மை நிலை என்ன? பாழ் செய்கின்ற உட்பகையும், கொலை, கொள்ளைகள், கற்பழிப்பு தீ வைத்தல், குண்டெறிதல் போன்ற குறும்புச் செயல்களும் நாட்டில் எங்கும் மலிந்து காணப்படுகின்றன.

'பல்சழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு'' இக்குறளை அளவு கோலாகக்கொண்டு எமது நாட்டின் இன்றைய நிலையைக் கணித்தால் இன்று சட்டமாக்கப்பட்ட ஆறும், ஏழாம், எட்டாம் ஒன்பதாம் திருத்தங்களின் இரகசியம் புலப்படும்.

நாட்டில் குழப்பக்காரர் அதிகம் குறிப்பாகவடபகுதி 'பயங்கரவாதம்' இவ்வித திருத்தச் சட்டங்களால் முறியடிக்கப்படுமென்ற நம்பிக்கை ஆட்சிக்கு உண்டென்று தோன்றுகிறது.

பெரும்பான்மை வாக்கு உண்டானுல் எதனையும் செய்து முடித்துவிடலாமா? இலங்கை ஒரு தனித்துவமான படைப்பா? கடந்த காலத்தில் பல சாதனைகள் இவ்வாறு புரியப்பட்டன.

தமிழர் அனைவரையும் நாடுகடத்த வேண்டுமென்ற தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேறினுல் அரசியலமைப்புக்கு அது முரண்பட்டதல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தால் நடப்பதென்ன?

சனநாயகத்தின் சாபக்கேடல்லவா இது?

கடந்த ஆட்சிகளின் இலாச்சிகளை, இன்றைய ஆட்சியின் இலாச்சியைத் திறந்து பார்த்தால் எத்தனை எலும்புக் கூடுகள் அங்கு காட்சியளிக்கும்?

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் எரிந்த போது அந்தச் செய்தி பிரபலப்படுத்தப்படவில்லை; இன்று அந்தக் கட்டிடத்தின் இடிபாடுகளில் கண்டெடுத்த எலும்புக் கூடுகள் மனித எலும்புக் கூடுகளாக இல்லையா என்றபரிசோதனை நடத்தப்பட்டது. சட்ட வைத்திய நிபுணர் அவை மனிதனின் என்று முடிவு வழங்கியிருக்கிறார்.

இது வெளிப்புற எலும்புக் கூடுகள்; நாம் கருதுவது அகப்புறத்தினது— Skeletons in the Cupboard என்றஆங்கில சொற்றெடர் இதனை அழகாக வர்ணிக்கிறது.

சட்டத்துக்கும் சன(னி) நாயகத்துக்கும் மேலாக மனச்சான்று என்ற ஒன்று உண்டு. எலும்புக் கூடுகள் அனைத்தையும் அகற்றவல்ல அந்தப் பேரொளி பிரகாசித்தாலன்றி நாட்டுக்கு உய்வில்லை என்பது திண்ணம்.

## கடவுச்சீட்டில் பாரபட்சம்

மக்கள் கருத்து பகுதியில் கடந்த 29ம் திகதி கடவுச்சீட்டு, ஏன் இந்த பாரபட்சம் என்ற கடிதத்தை பிரசுரித்தமைக்கு தங்களை பாராட்ட விரும்புகிறேன்.

உண்மையில் தமிழ் மக்களை கடவுச்சீட்டு அதிகாரிகள் 2 ம் தரப் பிரஜைகளாக கணித்து அவர்களுக்கு எண்ணிலடங்கா ஆவணங்களைச மர்ப்பிக்கும்படி வற்புறுத்துகின்றனர். இதனுல் தமிழ் கடவுச்சீட்டு விண்ணப்பதாரர் பலவித அவஸ்தைப்பட வேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகாரிகளையும் சதா குறைகூறுகின்றனர்.

கிராம சேவையாளரின் நற்சான்று தமிழ் பாஸ்போட் விண்ணப்பதாரருக்கு மட்டும் கேட்கின்றனர். மற்ற இனங்களுக்கு கேட்பதில்லை. இச்செயல் ஓர்பாரிய பாரபட்சமாகும். 'ஏதும் சந்தேகம் ஏற்பட்டால் எழுதிக் கேட்பதுதான் முறைமை ஆகும்.

இப்போது கிராம சேவையாளர் நற்சான்றுபடிவம் முடிந்துவிட்டபடியால் மேலும் கஸ்டப்படவேண்டியுள்ளது. சில கிராம சேவையாளரை கண்டு கொள்ள முடிவதில்லை என்றும் எத்தனையோ தில்லு முல்லுகள் செய்துதான் நற்சான்று பெற வேண்டியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசேடமாக தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் நல்லெண்ணம் படைத்த சகலரும் இவ்விடயத்தை எடுத்துக் காட்டி எல்லா மக்களையும் சமமாக மதித்து கடவுச்சீட்டுகளை விநியோகம் செய்ய சம்பந்தப்பட்ட இலாகாவினரை வற்புறுத்துமாறு வேண்டுகிறேன்.

கடவுச்சீட்டு இலாகாவுக்கு புதிய கட்டுப்பாட்டாளராக திரு. சி. டபிள்யூ சிறிவர்தன அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஓர் சிறந்த நிர்வாகி இப்படியான அநீதியை சகிக்கமாட்டார்.

**ஏ. எஸ். நாதன்**

வசாவிளான்

# வேண்டிய வரம் கொடுக்கும் அங்கணம்மைக்கடவை முத்துமாரி

எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவட்சக்தி உமை. பார்வதி, துர்க்கை, மனேன்மணி, இலக்குமி. சரஸ்வதி, காயத்திரி, சாவித்திரி, மீனுட்சி, காமாட்சி எனப் பல்வேறு நாமங்களால் போற்றப்படுகிறுர், அவ்விதம் அடியார்களின் வேண்டுதலுக்காக, ஆதிபராசக்தி எடுத்த வடிவங்களில் ஒன்ருக முத்துமாரியம்மை காட்சிதருகிருள். மாரன் என்னும் அரசனைச் சங்கரித்தபடியால் பராசக்திக்கு-'மாரி' எனப் பெயர் வந்ததெனப் மலையாள நாட்டுக் கர்ணபரம்பரைக் கதை கூறுகிறது.

பூர்வகாலத்திலே - ஒரு கன்னியர் கூட்டம், சண்டி

**சீ. விநாசித்தம்பி**

ருப்பாய் அங்கணம்மைக் கடவை-மண்மேட்டில் தங்கி, இளநீர் கேட்டுதாம். தீர்ந்தனர் என்றும்-அவர்கள் மக்களுக்குக் காட்சி காட்டி, மீனுட்சி, கண்ணகி - நாக

(5-ம் பக்கம் பார்க்க)

# அடியார்க்கு கருணைபுரியும் கட்டுவன் முத்துமாரி அம்மன்

ஈழத்திரு நாட்டின் வடபால் அமைந்த கட்டுவன்கிராமத்தில் ஆலயங்கள் பலவமைந்து மேன்மை கொள் சிவ நெறியையும், தமிழ்ப் பண்பாட்டினையும், செல்வச் செழிப்பினையும், வழங்கி மக்களை வாழவைத்துள்ளன என்பதில் ஐமிகையேதுமில்லை. கட்டுவனில் பல ஆண்டுகளுக்குமுன் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அன்னையாகிய அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று ஜீர்ணேத்தாரன அஷ்டபந்தன நவகுண்ட மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

**க. சிறிகரன்**

பல ஆண்டுகளுக்கு முன்னர் நம் முன்னேரால் ஆக்கப்பெற்ற இவ்வாலயமானது ஆரம்பத்தில் சிறிதாகவும் பின்னர் அக்கிராமத்தின் அடியார்களின் உதவியுடன் ஆதிமூலம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பவை கட்டப்பட்டு ஆதிமூல விக்கி

( 5ப் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## யாழ்ப்பாண மாந்தரும் இலங்கை வானெலியும்

வடபகுதியில் இலங்கை வானெலி நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்பது எப்படி என்ற எனது ஆலோசனை குறித்து தங்கள் 11-8-84 இதழின் ஆசிரிய தலையங்கத்திலுள்ள குறிப்பு வேதனையளிப்பதாகும்.

வானெலி பொழுதுபோக்குக்கான ஒரு சாதனம் என்ற நினைவிலே அக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது. ஒருநுட்பமான வானெலிச் செவிமடுப்பாளர், பொழுதுபோக்கு நிகழ்ச்சியைக் கேட்கும்போது கூட 'புறம்பான' பலதகவல்களை உய்த்துணர்ந்து கொள்வார் நாட்டு நிலைமை, காலநிலை,.. மனேநிலை என்பவற்றை இவ்வாறு அறிந்துகொண்ட தருணங்கள் பலவுண்டு.

நீங்கள் குறிப்பிட்டிருக்கும் காரணங்களுக்காக அல்லவெனினும், மண்டைதீவு ஒலிபரப்பு நிலையம் அந்தஇடத்திலிருந்து அகற்றப்பட்டதை நானும் வரவேற்கிறேன் ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்துக்கு நாம் எழுதிய கடிதத்திலும் மாற்றுவசதிகள் செய்துதரப் படவேண்டுமெனவே கோரிக்கை விடுத்தோம். யாழ். ஒலிபரப்பு நிலையத்தை மீண்டும் அமைக்கும்படி கேட்கவில்லை. இந்த நிலையம்செயற்பட்ட காலத்தில் யாழ். வானெலி நேயர்கள் சேவை இரண்டின் மயக்கத்தில் சட்டுண்டு கிடந்தார்கள் வாழ்க்கைக்குப் பயனுள்ள, அறிவூட்டக்கூடிய நிகழ்ச்சிகள் வேறு நிலையங்களிலிருந்து ஒலிபரப்பான போதிலும் அவற்றைக் கேட்காமலும் அவைபற்றி அறியாமலும் பலர் இருந்தார்கள். வானெலி வெறும் பொழுதுபோக்கு சாதனம் என்ற மனப்பான்மையும் இந்த நிலையாற்றுன் ஏற்பட்டது மேலும் இந்நிலையம் செயற்பட்டபோது கோயம்புத்தூர், பாண்டிச்சேரி ஆகிய நிலையங்களைக் கேட்கமுடியாமலிருந்தது இப்போது இக்குறைகள் நீங்கி வடபகுதிமக்கள் பல்வேறு நிலைய நிகழ்ச்சிகளைக் கேட்கத் தொடங்கியிருக்கிறுர்கள் உலகத்தமிழ் ஒலிபரப்புகளை மக்கள் மன்றத்தில் பரவச்செய்யவேண்டும் என்ற எமது தமிழ்ஒலிவானெலி நேயர் மன்றத்தின் குறிக்கோள் இவ்வாறு நிறைவேறுவதையிட்டு உண்மையில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனுல் 'இலங்கை வானெலியின் வஞ்சனையற்ற வீண்புளுகிலிருந்து தற்காலிகமாகவாவது (யாழ்மக்கள்) காப்பாற்றப்பட்டிருக்கின்றனர்' என்ற போக்கு விரிந்த மனப்பான்மையல்ல இப்போதைய நிலையில் எம்மவர்கள் பங்குபற்றக்கூடிய கலை, இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு இலங்கை வானெலியையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. வயிற்றுப் பாடுதான் முக்கியம் என்போருக்கு இதைச்சொல்லிப் பயனில்லை ஆனுல் முன்னேற்ற

[5-ம் பக்கம் பார்க்க]

# நன்கொடை நிதியை அதிகரிக்குமாறு யாழ். சனசமூகநிலையஒன்றியம் கோரிக்கை

(கொழும்புத்துறை)

சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படும் அரச நன்கொடைப் பணத்தை அதிகரிக்குமாறு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது சம்பந்தமான மகஜர் ஒன்றை யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியப் பொதுச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா பிரதமரும் உள்ளூராட்சி வீடமைப்புத் துறை அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாசாவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

தற்போது 'ஏ' தரச் சனசமூக நிலையங்களுக்கு 500 ரூபாவும், 'பி' தரச் சனசமூக நிலையங்களுக்கு 300 ரூபாவும் அரச நன்கொடைப் பணமாக வழங்கப்பட்டு வருகின்றது. 'சி' தரச் சனசமூக நிலையங்களுக்கு அரச நன்கொடைப் பணம் வழங்க படுவதில்லை.

இப்போது சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வரும் அரச நன்கொடைப் பணம் போதாமல் உள்ளன வென்றும், இதனுல் சனச்மூக நிலையங்கள் சிரமம் அடைந்து வருவதாகவும் பிரஸ்தாப மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

'ஏ' தரச் சனசமூக நிலையங்களுக்கான அரச நன்கொடைப் பணத்தை 1000 ரூபாவாக அதிகரிக்குமாறும், 'பி' தரச் சனசமூக நிலையங்களுக்கான அரச நன்கொடைப் பணத்தை 750 ரூபாவாக அதிகரிக்குமாறும், 'சி' தரச் சனசமூக நிலையங்களுக்கும் 500 ரூபாவை அரச நன்கொடைப் பணமாக வழங்க வேண்டுமென்றும் பிரதமரிடம் கோரப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 655 பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# வீட்டு யன்னல் உடைத்து பெறுமதியான புடைவைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்திலுள்ள வீடொன்றின் யன்னல் உடைக்கப்பட்டு ரொக்கப்பணம் உட்பட 12,246 ரூபா பெறுமதியான உடுபுடவைகள் திருடப்பட்டுள்ளன.

மல்லாகம் 'வங்களாவீதி'யிலுள்ள செ. தர்மலிங்கம் என்பவருக்குச் சொந்தமான வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் இடம்பெற்ற இரவு வீட்டுக்காரருட்பட ஏழுபேர் அவ்வீட்டில் படுத்திருந்ததாகவும் அடுத்தநாள் காலை எழுந்து பார்த்த பொழுது வீட்டின் பின்பக்க யன்னல் கதவுகள் கம்பிகள் உடைக்கப் பட்டிருந்ததாகவும் அறைக்குள்ளிருந்த அலுமாரி உடைக்கப்பட்டு 3,600 ரூ, 46 சதம் கொண்ட ரொக்கமும், மற்றும் கூறைசேலை, 3 காஞ்சிபுரம்சேலை, 3 பிளவ்ஸ், 4 பாவாடை, 3 நைலோன்சாறி சிறுபிள்ளை பாவாடை உட்பட 12,246 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளது.

மல்லாகம் பொலிஸ் பொது சன தொடர்பு சபையினர் இது சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டுள்ளனர். [மா]

# வெள்ளிக்கிழமை மீன்சமைத்து கொடுக்க மனைவி மறுத்தார் — கணவன் வாழ்வை முடித்தார்!

(மாவிட்டபுரம்)

வெள்ளிக்கிழமை நாளில் மீன்கறியுடன் சோறு தர மனைவி மறுத்ததால் கணவன் நஞ்சிடம் தஞ்சம் அடைந்த சம்பவம் ஒனறு வயாவிளானில் நடந்துள்ளது.

வயாவிளானைச் சேர்ந்த சின்னட்டி ராசன் என்னும் 52 வயது நபரே இவ்வாறு மரணமானர்.

தெல்லிப்பளை மரண விசாரணை அதிகாரி திரு, என். தம்பிராசா மரண விசாரணை நடத்திய போது மேற்படி நபர் மது அருந்தும் பழக்கம் உடையவர் என்றும் பிள்ளைகள் உழைப்பதால் இவர் உழைப்பதில்லை என்றும் மது வெறியில் வந்து மனைவியுடன் எந்தநாளும் சண்டைபிடிப்பதாகவும் சம்பவதினம் வெள்ளிக்கிழமை குடிவெறியில் வந்து மீன்கறியுடன் சோறு கேட்டதாகவும், வெள்ளிக்கிழமையில் மீன் சமைக்கவில்லை என்று மனைவி கூறியதும் கவலையடைந்து சென்று நஞ்சருந்திவிட்டு வீட்டுக்கு திரும்பியதாகவும் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை டாக்டர் பராசக்தி யோகரத்தினம் உட்படபலர் சாட்சியம் அளித்தபின் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

மயிலிட்டி தெற்கு கிராம சேவையாளர் திரு. உலகநாதன் விசாரணைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

# "தமிழ் வி. சே. அலுவலர்கட்கு சிங்கள தேர்ச்சியில் இருந்து விலக்களிக்கவேண்டும்"

## ஜனுதிபதிக்கு மகஜர்

(சித்தன்கேணி)

தமிழ்பேசும் விசேட சேவை அலுவலகங்களுக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்களிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவுக்கு தமிழ்பேசும் விசேட சேவை அலுவலர் கழகம் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அம்மகஜரில் பின்வரும் கோரிக்கைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளரினுல் அண்மையில் கடமைகள் தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்தை பூரணமாக அமுல் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கும் வேறு இடங்களுக்கும் கடமையின் பொருட்டு பிரயாணஞ்செய்தால் சகல படிகளும் வழங்கப்படவேண்டும்.

அபிவிருத்தி அலுவலர்களாக பதவி உயர்வு வழங்குவதற்கு திட்டமொன்றை நடை முறைப்படுத்தவேண்டும்.

இலங்கை நிர்வாகசேவை ஆள்சேர்ப்பு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்கவேண்டும்.

சமூக சேவைகள் தொடர்பாக பயிற்சிநெறியை தொடர்வதற்கு பயிற்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவேண்டும்.

ஆகிய கோரிக்கைகள் கொண்ட இன்னும் பல கோரிக்கைகள் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர், பிரதேச அபிவிருத்தி அமைச்சர், கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனைவடக்கு பண்டாரபுலம் தான் தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மகோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை6 மணிமுதல் பிரம்மஸ்ரீ வை' நித்தியானந்தசர்மாவினுல் ''தேவி மகத்துவம்'' என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துவார்.

# இன்று

(யாழ்ப்பாணம்

அளவெட்டி தெற்கு முத்துமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் இன்று அதிகாலை நடைபெறவுள்ளது.

இன்று மாலை அம்பாள் திருவீதி உலா வருதலும் இடம்பெறவுள்ளது.

## வேண்டிய...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பூஷணி எனத் தமது திருநாமங் கூறி அங்கே கோயில் கொண்டனர் என்றும் கர்ண பரம்பரைக் கதை. பின்பு அக்கூட்டத்தில் வந்த ஒரு கிழவி வடக்கே சென்று (அளவெட்டி தெற்கில்) ஒரு வேம்பின்கீழ் இருந்து - வயல் வேலைசெய்பவருக்குத் திருவருள் பாலித்து-மாடுமேய்ப்பவரிடம் பால் வாங்கிக் குடித்து -தாங்கொணு வைசூரி அம்மை நோயால் வாடிய நோயாளரின் பிணிதணித்து மறைந்தனர் என்றும்-சித்தர் என்ற புண்ணியன் அக்கிழவி தங்கியவேம்பின்கீழ்முத்துமாரி எனக் கல்லு வைத்துப் பூசித்தார் என்றும் வரலாறுண்டு.

காஞ்சிபுரத்திலிருந்து சிலை கொணர்ந்து சிறு கோயில் கட்டி வழிபாடாற்றிவந்தனர். சுமார் நூறுண்டுக்கு மேற்பட்ட காலமாகக் கும்பாபிஷேகம் செய்யாமலிருந்த இவ்வாலயத்தை - தெய்வீகநெறி நின்ற திருத்தொண்டர் கூட்டம் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் இன்று செய்கின்றனர்.

அடங்காத பேய்களொடு
நோய்போய்க்கி அடிய
வருக்கன்புநீர் தந்து காத்து
நடங்காணும் சிங்கத்தில்
நலங்காணும் கொலுவேறி
நவகோளின் துயர்களைந்து
விடங்காணும் வாழ்விலே
மெய்காண வைத்தெங்கள்
வினையெல்லாம்
தீர்த்தருள்வாய்
திடங்காணும் திருத்
தொண்டர் பணிசெய்யும்
பென்னளவைச்
சிவமுத்து மாரித்தாயே

நோய் நீக்கி, வறுமை அகற்றி, வேண்டிய வரம் கொடுத்து வீற்றிருக்கும் செல்வியை உயிர்கள் எல்லாம் வணங்கி இன்படைடயும்.

## அடியார்க்கு...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ரகம் கருங்கல்லினுல் சிறப்புறச் செய்வித்து கும்பாபிஷேகம் நடைபெற்று, அதைத்தொடர்ந்து நித்திய பூசை விசேட பூசைகள் வருடாந்த உற்சவங்கள் ஒழுங்காக நடைபெற்று வந்தன.

ஒரு லட்ச ரூபாவுக்கு மேலான செலவில் ஆலயவீதியில்விநாயகர், ஆலயம் காளிதேவி ஆலயம், முருகன் ஆலயம்சனீஸ்வரர்ஆலயம்வைரவர் ஆலயம் சண்டேஸ்வரி ஆலயம் என்பவற்றை நிறுவி திருப்பணி வேலைகளை இனிதே நிறைவு செய்து இதன் மஹா கும்பாபிஷேகத்தை இன்று நடாத்துகின்றனர்.

இவ்வாலயத்தில் 1976 ஆண்டு தொடக்கம் கொடியேற்றி மகோற்சவமும், நவராத்திரி, கௌரி நோம்பு, கந்தசஷ்டி படிப்பு, சூரன்போர் திருவெம்பாவை போன்ற விசேச உற்சவங்களும் நடைபெற்று வருகின்றன.

# ம. கிழக்கில் வேலைபெற்றுத் தருவதாகக்கூறி பணமோசடி

(மட்டக்களப்பு)

மத்திய கிழக்கில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக மட்டுநகர் இளைஞரிடம் 4 ஆயிரம் ரூபா பெற்று பணத்தை நம்பிக்கை மோசடி செய்த கண்டிவாசி ஒருவரை மட்டக்களப்புப் பொலிஸார் விசாரணைக்காக தேடிவருகிருர்கள்.

கண்டிவாசியான கே. ஆர். பிரான்சிஸ் என்பவர்தான் தேடப்பட்டுவருபவராவர்.

இவருக்கெதிராக மட்டக்களப்பு கொம்மாந்துறை வாசியான க. ஞானேஸ்வரன் என்பவர் மட்டக்களப்பு விசேட குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேற்படி நபர் மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக்கூறி 22 ஆயிரம் ரூபா கேட்டு அதில் முற்பணமாக 4ஆயிரம் ரூபா பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணையை திரு. ரவீந்திரராஜா மேற்கொண்டு வருகிருர்.

## ஆணவ இருள் அகற்றும் குளப்பிட்டி காளியம்மாள்

கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் கோயில் கொண்டு காலம் எல்லாம் கருதிவழிபடும் தொண்டர் துடைக்கும் தெய்வம் அருள் மிகு காளியம்மாள்இன்று அடியார் அன்பகத் ஊறும் அன்பு அபிடேகமாக சங்காபிடேகம் ஏற்று நிற்கிருள்.

ஆணவ இருள் கடிந்து ஆன்மாக்களை ஈடேற்றும் அருட் கோலமே காளிதேவி கோலம் கொடுமையான தாகக்காட்டி அகத்து அருள் தாங்கி தெருட்டி நெறிப்படுத்தும் தாய்த் தெய்வம் நாட்டுக்கு நல்லவை அருள வேண்டி அவள் தாள் பணிகிருர்கள் மெய்யடியார்கள்.

இ.கிருபா

## படமாளிகைகள் எதிர்நோக்கும் பிரச்னைகள்

[மாவிட்டபுரம்]

கொழும்பில் இருந்து பார்சல்கள் அனுப்ப முடியாதுள்ளதால் படமாளிகைகள் மூடவேண்டிய நிலை உருவாகி வருவதாக கூறப்படுகிறது,

வழமையாக கொழும்பில் இருந்து படப்பிரதிகள் ரயில் மூலம் அனுப்பப்பட்டு வந்தது

தற்சமயம் ஏற்பட்டுள்ள நிலையில் கொழும்பில் பார்சல்கள் ஏற்றப்படாததால் புதிய படப்பிரதிகளை இங்கு அனுப்ப முடியாதுள்ளதாக தெரிவிக்கப்பட்ருள்ளது.

இங்குள் ளதியேட்டர்உரிமையாளர்கள் தமக்குள் மாற்றிக் கொள்வதாகவும், இதன்பின் என்ன ெறல்வது என்று தெரியாதுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாண...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்த ஒரு சமூகத்துக்கு வயிற்றுப்பாட்டை விட முக்கியமானவைகள் பலவுண்டு அவற்றில் ஒன்றுகலைஇலக்கிய உணர்வு. கஞ்சிக்கு வழியில்லாத நிலையிலும் காவியம் பாடிய புலவர்கள் பற்றித் தமிழ்மக்கள் நன்கறிவார்கள்.

கல்வியிலும் கலைகளிலும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாண மக்களுக்கு எந்த நிலையிலும் வானெலி நிலையம் இயங்க வேண்டுமெனக் கேட்டால் (அவர்கள் கற்றும் கசடறக் கல்லாதவர் என்றுகூறலாமா?

எஸ். உமாகாந்தன்
அமைப்புச் செயலாளர்
தமிழ் ஒலிவானெலி
நேயர் மன்றம்

குறிப்பு: இலங்கை வானெலி என்று நாம்குறிப்பிட்டது ஒரு ஆகுபெயர். 'இலங்கை அரசின் செய்தி' பற்றியே' இப்பகுதிமக்கள் படும் வேதனையில் அச்செய்தியில் இடம்பெறும் புளுகுதாங் கொணுதென்பதே தலையங்கத்தின் உள்ளுடன் இன்னும் ஒறுமுறை அதனைப்படித்தால் 'இலங்கை வானெலி நீடுழி வாழ்க' புளுகு ஒழிக' என்பது தெளிவாகும்.

ஆ-ர்

# இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—15(31-08-1984)
வாரம்—வெள்ளி
திதி—பஞ்சமி பிற் பகல் 2-20 வரை
நக்ஷத்திரம்—சுவாதி பின் இரவு 12-14 வரை

மேடம்:: குமுறும் நெஞ்சுடன் நாளைக்கடத்து வீர்கள் சிறு விடயத்திற்குக் கூட மற்றவர்கள் குறை கூறுவார்கள் சுகாதாரமாக நடந்து கொள்ளவும்.

இடபம்:- அதிகாரப் பேறுக்கும் அதிக பொருள் வரவிற்கும் இடமுண்டு ஆக்கப்பணியில் அதிகம் ஈடுபடு வீர்கள் குடும்பத்திலும் அதிகமகிழ்ச்சி தென்படும்.

மிதுனம்:- அவசர போக்கு சிக்கலைத் தோற்றுவிக்கும் மனதில் விரக்தி தோன்றும் வீணான சிந்தனையால் சோர்வு தோன்றும் அமைதிநன்று.

கடகம்:- எல்லாத்துறையிலும் அதிக அபிவிருத்தி காணப்படும் மாணவர்களாயின் முன்னேறும் வாய்ப்புக் கிடைக்கும் எதிர்பாராத இடத்திலிருந்து பொருள் வரவிற்கு இடமுண்டு.

சிங்கம்:- பிள்ளைப்பாசம் உள்ளத்தில் தலைதூக்கும் சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிகாண முடியும் குடும்பத்தில் பிணைப்புகள் இறுகும்.

கன்னி:. தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும் எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம்ஆயுதங்களுடன் பழகு பவர்கள் அவதானமாக இருக்கவும்.

துலாம்:- குடும்பத்தில் குதூகலம் தென்படும் காதலர்களுக்கு கற்கண்டான தினம் உறவினர்களின் ஆதரவும் பெற்றோரின் ஆசியும் தப்பாமல் கிட்டும்.

விருச்சிகம்:- எதிர்பாராத முன்னிலையிலிருந்து ஆபத்து உருவாகும் உள்வீட்டிலேயே சிறியபூசல்கள் தோன்றும் இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும்.

தனுசு:- பொதுப்பணிகளில் ஈடுபடுபவர்கள் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவர் அந்தஸ்திலும் முன்னேற்றமுண்டு பரம்பு பொருளின்அருளுக்கும் இடமுண்டு.

மகரம்:- தொழில்துறையில் சிறப்புக்கும் இடமுண்டு புதிய கண்டு பிடிப்புக்களுக்கும் இடமுண்டு பொறியியலாளர்களுக்கு சிறப்பானதினம்.

கும்பம்:- மெத்தவும் பொருள் சேரும் மேலிடத்து ஆதரவும் தப்பாமல் கிட்டும் தித்திக்கும் செய்தியுடன் தேனான வாழ்வுமுண்டு.

மீனம்:- துன்பத்தின்ரேகை

(7-ம் பக்கம் பார்க்க)

# வானொலி இன்று

காலை

5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப்பாடல் ப. முத்துக்குமாரசாமி சர்மா
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமியநற்சிந்தனை
6-10 அறநெறிஆரம்
6-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப்பாடல்
7-00 தலையே நீ வணங்காய் தெல்லிப்பளை துர்க்கையம்மன்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 நாதஸ்வரம்- மதுரை சேதுராமன் பொன்னுசாமி
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்புமுடிவு

மாலை

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 கோபுரதரிசனம்
6-45 உடல்நலம்

இரவு

7-00 களத்துமேடு
7-15 இல்லறஜோதி
7-30 உலகச் செய்திகள்
7-40 நாட்டுப்பாடல்- இறை வணக்கம்
7-45 மலேஷிய தேசியதின விஷேட நிகழ்ச்சி
8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள். வாத்திய இசை
9-30 பேச்சு 'பறவாத பறவைகள்' சிற்பி
9-45 கதாப்பிரசங்கம் வி. எஸ். கணேசசுந்தரப்
10-30 வாத்தியம் வயலின் துவாரம்வெங்கடசாமி நாயுடு
11-00 ஒலிபரப்பு முடிவு

# ரூபவாஹினி

மாலை

5-30 நாட்டுவளம் (ஆங்கிலம்]
5-35 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
6-00 விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)
6-15 'பிளாஷ் கோர்டன்' (ஆங்கிலம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 குருநாகல் தேசிய விளையாட்டுவிழா
7-45 பொது அறிவுப் போட்டி (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 கலைநிகழ்ச்சி(சிங்களம்)
9-00 'லண்டன் கொஸ்பிரைஸி' திரைப்படம் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத் தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைப்படத் தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு

## தலைவராகத் தெரிவு

(வேலணைதீவு)

மட்டக்களப்பு பாலமீன்மடுவைச் சேர்ந்த திரு இ, பஞ்சாட்சரம் அண்மையில் ஒன்றிணைக்கப்பட்ட அமிர்தகளி-நாவலடி கிராம சேவையாளர் பிரிவு கல்வி, உணவு, சுகாதார, போசாக்கு சனத்தொகை குழுவின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# கிளிநொச்சி செய்திகள்

— கே. வி. கே. திருலோகமூர்த்தி —

## கிளிநொச்சியில் கோப்பிச் செய்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் நிழல் மரங்களின்கீழ் கோப்பிச் செய்கையை மேற்கொள்ளவும் தென்னை நிலங்களில் நிலக்கடலையை இடைப் பயிராக பயிர் செய்யவும் விவசாயப் பகுதியினர் திட்டமிட்டு வருகின்றனர்.

இவ் இரு பயிர்களையும் முன் மாதிரித் திட்டத்தின் கீழ் செய்கை பண்ண ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதற்கான முயற்சியில் விரிவாக்கப் பகுதி உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். ரி. பத்மநாதன் ஈடுபட்டுள்ளார்.

## கொள்ளை முயற்சி தோல்வி

இரவு வேளை வீடொன்றில் முகமூடி அணிந்து ஆயுதங்கள் துப்பாக்கிகள் சகிதம் உட்புகுந்த கோஷ்டி ஒன்று வீட்டாரை பலமாக தாக்கி கொள்ளையடிக்க முயன்றனர்.

வீட்டுச் சொந்தக்காரர் உயிரையும் மதிக்காது எதிர்த்து போராடியதன் விளைவாக கொள்ளையர் அணிந்து வந்த முகமூடிகள் கிளித்தெறியப் பட்டது.

சத்தம் கேட்டு அயல் வீட்டுக்காரர் ஸ்தலத்திற்கு விரையவே நிலை தடுமாறிய கொள்யர் தலைதெறிக்க ஓட்டமெடுத்தனர்.

கிளிநொச்சி முதலாம்வாய்க்காலில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. கொள்ளையரால் தாக்குதலுக்காளான வீட்டுச் சொந்தக்காரர் எம். சேனாதிராசா படுகாயம் அடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மலையக மக்கள் வாழ்வுக்கு நடவடிக்கை

காலத்திற்கு காலம் ஏற்படும் இனக்கலவரங்களால் பெரும் தொகையான மலையக மக்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் குடியேறி வருவதால் இங்கு வாழ்ந்து வரும் மலையக மக்கள் மத்தியில் வாழ்க்கைத்தரம் குன்றி மிகவும் சீர்கேடான நிலை உருவாகி வருகிறது. இந்நிலையை மாற்றி இவர்கள் வாழ்வு மலர எல்லோரும் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு உழைக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு கனகபுரம் இளைஞர் முன்னேற்றக் கழகம் ஏற்பாடு செய்த உணவு போசாக்கும் குடும்ப பருவமும் என்ற கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் அதிகாரி திருமதி பவானி சிறீஸ்கந்தராசா குறிப்பிட்டார்.

## வெங்காயச் செய்கை பாதிப்பு

போதிய அளவு விதை வெங்காயம் கிடைக்காத காரணத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில்இம்முறை வெங்காயச் செய்கை பாதிப்படைந்தது என கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்) எஸ். ரி. பத்மநாதன் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கிளிநொச்சி கமநல சேவை மண்டபத்தில் அரசாங்க அதிபர் என். ஜெயநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

## கிளிநொச்சியில் க. பொ.த. பரீட்சை

கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் வசதியை முன்னிட்டு முதல் தடவையாக க.பொ.த. உயர்தர பரீட்சை நிலையம் செயல்பட ஆரம்பித்தது.

இதன் மூலம் கிளிநொச்சி மாவட்ட மக்களதும், மாணவர்களினதும் நீண்ட கால கோரிக்கை ஒன்று நிறைவேறி உள்ளது.

பரீட்சை நிலையம் ஆரம்பித்தமைக்கு கிளிநொச்சி கொத்தணி பாடசாலை அதிபர் ஏ. கே. இரசேந்திரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

புதிய பரீட்சை நிலையம் உருவாகியதைத் தொடர்ந்து கிளிநொச்சியில் இருந்து யாழ் பரீட்சை நிலையங்களிற்கு விண்ணப்பித்த பரீட்சாத்திகள் கிளிநொச்சியில் இம்முறைபரீட்சை எடுக்க வசதி செய்து கொடுக்கப்பட்டது.

## பிரசவத்தில் மரணம்

தனிமையில் இருந்த இளம் கர்பவதியான விவசாயப்பகுதி உத்தியோகத்தர் ஒருவர் பிரசவத்தின் போது யாரும் உதவிக்கு இருக்காததால் குருதிப் பெருக்கேற்பட்டு மிகவும் பரிதாபமாக மரணமானார்.

பிரசவம் நடைபெற்று பல மணி நேரத்தின் பின் இரத்த வெள்ளத்தில் கிடந்த சிசுவின் அழுகுரல்கேட்டு அயலில்உள்ள பெண் ஒருவர் ஸ்தலத்திற்கு விரைந்து சிசுவைக் காப்பாற்றினார்.

மரணமானவர் புலோலியைச் சேர்ந்த இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தில் பணிபுரிந்த திரவியம் தங்கமணி (37 வயது) ஆவார்.

இம்மரணம தொடர்பான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரண விசாரணை அதிகாரி மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சிப் பொலிசார் ஆஜர் செய்தனர்.

(7ம் பக்கம் பார்க்க)


## வர்த்தகர்களுக்கு விசேஷ அறிவித்தல்

உங்களுக்குப் பணக்கஷ்டம் ஏற்படுகின்றபோது
உங்களிடம் இருக்கும் வர்த்தகப் பொருட்களை
எங்களிடம் ஒப்படைத்து
உங்களுக்குத் தேவையான பணத்தினைப்
பெற்றுக்கொள்ளவும்.
பின்பு குறுகிய கால எல்லைக்குள்
பணத்தினைக் கொடுத்து உங்கள் பொருட்களை
மீட்டுக்கொள்ளலாம்.

TFC

த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680

## ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்

உல்லாச பஸ் சேவை
மீண்டும் நடைபெறுகிறது!

தற்போதைய சூழ்நிலை கருதி
மாலை 6 மணிக்கு
கன்னுதிட்டி சந்தியிலிருந்து புறப்படும்.

டிக்கட் பதிவு செய்யுமிடங்கள்

1. ஹோம் பினான்ஸ் லிமிட், கன்னுதிட்டி.
தொலைபேசி; 24310
2. நியூ லங்கா சேல்ஸ் சென்ரர்,
இல 6, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23596
3. நியூ பரசிதா சேல்ஸ் சென்ரர்,
இல. 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22480

UNIQUE COMMUNICATION SERVICE

## யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில்
தெளிவான சர்வதேச
தொலைபேசி ரெலெக்ஸ்
அழைப்புகளுக்கு
இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1/1 மகாத்மா காந்தி றோட்,
(சலுசலவுக்கு அண்மையில)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ்: - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டடம
த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ் - 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066

**கிளிநொச்சி...**

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேத பரிசோதனையை மாவட்டச் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பி. நவரெத்தினராசா நடத்தினார். இயற்கை மரணம் என தீர்ப்பு வழங்கப்பட்டது.


**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**என் தம்பி**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கமலஹாசன்-சுஜாதா
**உயர்ந்தவர்கள்**

**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-00, 4-30
**Gold Runner**
Action—Thrill

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். - லதா
நம்பியார்
**பல்லாண்டு வாழ்க**
(புத்தம் புதிய பிரதி-கலர்)

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரவிச்சந்திரன் ராஜஸ்ரீ
**உத்தரவின்றி உள்ளே வா**

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணாம்மா
**மனோகரா**
(புதிய பிரதி)

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30, 6-30
Rex Harrison...
Darmendra...
Zeenath Aman...
in
SHALIMAR
Action-Packed-
English Movie

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30,, 2-30 6-30,
**யாருக்காக அழுதான்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெமினி-சரோஜாதேவி
நாகேஷ்
**தாமரைநெஞ்சம்**
[புதிய பிரதி]

**Shanthi** (JAFFNA)
Daily 10-30, 2-30 and 4-45
MOVING VIOLATION
(Color)
(Action Thrilling Suspense)
வீதியால் செல்லும் இளைஞனிடம் பொலிசார் நடந்துகொள்ளும் காட்டுமிராண்டித்தனம்.
இதனைத் தொடர்ந்து நடக்கும் பின் விளைவுகள்... முடிவு. அதே பொலிசார் அவனால் அழிக்கப்படுகிறார்கள்)


## யாழ். கிளிநொச்சி
# ஆஸ்பத்திரிகளுக்கு லொறி மூலம் மருந்துகள்!

(மாவிட்டபுரம்)

யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இவ்வருட மூன்றும் கந்தாயத்திற்கான மருந்துவகைகள் இவ்வாரம் தொடக்கம் யாழ் சுகாதார திணைக்கள மருந்துக் களஞ்சியப் பகுதியினர் நேரடியாக லொறி மூலம் கொண்டு சென்று விநியோகம் செய்து வருகின்றனர்.

இதன்மூலம் இப்பகுதி அரசினர் வைத்திய சாலைகளிலும் மருந்தகங்களிலும் நிலவிய மருந்துத் தட்டுப்பாடு நீங்கிவிடுமென்று அறியப்படுகிறது. வைத்திசாலைகளுக்குஎந்த எந்த திகதிகளில் மருந்துவகைகள் விநியோகம் செய்யப்படும் என்ற விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்று யாழ் பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் கே. மாணிக்கம் வெளியிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் அடுத்த மாதம் மூன்றும் திகதியன்று பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலைக்கும்' சங்கானை, அளவெட்டி, மானிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கும் மருந்து வகைகள் நேரடியாக கொண்டு சென்று விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மறுநாள் 4ம் திகதியன்று யாழ் அரசினர் ஆஸ்பத்திரிக்கு மருந்துகள்விநியோகம் செய்யப்படும் என்றும் 5ம் திகதி சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கு மருந்துகள் விநியோகிக்கப் படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏழாம் திகதியன்று கோப்பாய் புத்தூர், அச்சுவேலி ஆகிய அரசினர் வைத்தியசாலைகளுக்கும் 11ம்- திகதியன்று வட்டுக்கோட்டை, தொல்புரம், காரைநகர் ஆகிய அரசினர் வைத்தியசாலைகளுக்கும் 12ம் திகதி யன்று பருத்தித்துறை, அம்பன், மருதங்கேணி, முள்ளியான் அரசினர் வைத்திய சாலைகளுக்கும், 14ம் திகதி யன்று கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலைக்கும் மருந்து வகைகள் விநியோகம் செய்யப்படவிருப்பதாக இச் சுற்றிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேர் ராசிக் பரீத் மறைவுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

''சேர் ராசிக் பரீத்தின் மறைவானது முஸ்லிம் மக்களை மிகவும் அதிர்ச்சிக்குக்குள்ளாக்கியுள்ளது. என்று சாவகச்சேரி முஸ்லிம் வாலிபர் முன்னேற்றநிர்வாக சபைக் கூட்டத்தில் மன்றத் தலைவர் கே.எம். ஜலில் கூறினர்,

அவர் தொடர்ந்து கூறியதாவது; அவரின் சேவைகள் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்லாது மற்றய இனமக்களுக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்க கூடியதாக விருந்தன அவர் ஆரம்பித்துவைத்த சேவைகள் தொடர்ந்து நடைபெற முஸ்லிம்கள் ஒன்று பட்டு ஒற்றுமையாக செயல் படவேண்டும்.

செயலாளர் ஜ. நவாஸ் பேசுகையில் அன்னாரின் மறைவு முஸ்லிம் சமுதாயத்திற்கு மட்டுமல்ல நாட்டிற்கும் பேரிழப்பாகும் என்றார்.

(க)

## புகார்

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்திய சாலையில் மலேரியா நோயை பரிசோதனை செய்து கண்டறிவதற்க்கான இரத்தப் பரிசோதனை கடந்த இருமாத காலமாக நடைபெறாது இருப்பதாக புகார் தெரிவிக்கப் படுகின்றது.

இரத்தப் பரிசோதனைக்கான கண்ணாடி சிலேட்ஸ் இல்லாமை இதற்கு காரணமாகும். இவ் வைத்தியசாலைக்கு தேவையான மேற்படி கண்ணாடி சிலேட்டுகளை தாமதமின்றி அனுப்பி வைக்குமாறு வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். இராசரத்தினம் யாழ். பிரதேச மலேரியா தடை இயக்க வைத்திய அதிகாரியை கடித மூலம் கேட்டுள்ளார்.

## இன்றைய பலன்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

படரும் எதிலும் தயக்கம் ஏற்படும் ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையைவிரிப்பர் நிதானம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## இன்று மகாகும்பாபிஷேகம்

(புலோலி)

இமையாணன் அருள்மிகு கும்பவாழி வீரகத்திவிநாயகர் திருக்கோயில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இன்று 31ம் திகதி வல்வை அருள்மிகு ஸ்ரீமுத்து மாரியம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவாகம சித்தாந்த ஞான தேசிகபானு ஸ்ரீலஸ்ரீ சோ தண்டபாணிக தேசிகர் (சமாதான நீதவான்) தலைமையில் நடைபெறவுள்ளது.

சிவத்திரு. சோ. விஜயரத்தினக்குருக்கள் சிவத்திரு. மு. சிதம்பரநாதக்குருக்கள் சிவத்திரு. சோமஸ்கந்தக்குருக்கள் சிவத்திரு. இ. இரத்தினேஸ்வரக்குருக்கள் ஆகியோர் கும்பாபிஷேகத்தின்போது சிவாச்சாரியார்களாகக் கடமையாற்றுவார்கள். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாட்களுக்கு மண்டலாபிஷேகமும் உற்சவமும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## சமூகஒற்றுமையை வளர்க்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி, பலாலி, வளலாய் போன்ற இடங்களில் வாழும் மக்கள் மத்தியில் சமூக ஒற்றுமையை வளர்ப்பதிலும், அம்மக்களின் பிரச்னைகளைக் கேட்டறிந்து அவற்றிற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதிலும் மயிலைப்பங்கு கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் ஏற்பாடுகளை செய்துவருகிறது. மேற்குறிப்பிட்ட பகுதியில் பொருட்களில் கலப்படம் செய்ய முனைந்த வியாபாரிகள் எச்சரிக்கப்பட்டுள்ளதுடன் பதுக்கலைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் மயிலைப்பங்கு கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் தலைவர் திரு. ஏ. ஜே. பீட்டர் தெரிவித்தார்.

கசிப்பு உற்பத்தி செய்வோரையும் இளைஞர் ஒன்றியத்தினர் கடுமையாக விமர்சித்துள்ளதுடன் இம்மாதம் 31ம் திகதிக்கு பின் இத்தொழிலில் ஈடுபடக்கூடாது எனவும் எச்சரித்துள்ளமையை பொதுமக்களும் சமூகநலன் விரும்பிகளும் பாராட்டியுள்ளனர்.

## அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் சித்தன்கேணியைச் சேர்ந்த கால் ஒன்றை இழந்த ஒருவருக்கு மோட்டார் இயந்திரம் பொருந்திய நவீனமுறையிலான மூன்று சக்கர சைக்கிள்வண்டியொன்றை அன்பளிப்பு செய்யவுள்ளது. எதிர் வரும் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் மானிப்பாயில் நடைபெறும்வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் விசேட பொதுக்கூட்டத்தில் மேற்படி மூன்று சக்கர சைக்கிள் வண்டி அன்பளிப்பு செய்யப்படவிருப்பதாக கழகத் தலைவர் டாக்டர் ரி. பகீரதன் தெரிவித்துள்ளார்.

## சென்ஜோன் அம்புலன்ஸ் சேவைக்குப் பாராட்டு

(பண்டத்தரிப்பு)

மடுமாதாஆலயத்தில் நடைபெற்ற ஆவணிமாத உற்சவத்தின்போது அங்கு முகாமிட்ட சென். ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினர் ஆற்றிய சேவைகளுக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை பொலிசாரின் பாதுகாப்பு சேவை அறவே இல்லாது இருந்ததினால் இப் படையினர் பாதுகாப்பு பணிகளிலும், வீதி ஒழுங்கு, தொலைந்த பொருட்களைக் கண்டு பிடித்துக் கொடுத்தல், திருட்டு முயற்சிகள் நடைபெறாத வகையில் கண்காணிப்பு செய்தல் ஆகிய சேவைகளை சிறப்பான முறையில் அங்கு மேற்கொண்டமைக்காக மடுமாதா ஆலய பரிபாலகர் வண. பிதா தேவராஜன் அடிகளார் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி அவர்களிடம் பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளார், ஆலயத்தில் திரண்டிருந்த பெருந்தொகையான பக்தர்களுக்கு இரவு பகலாக இப்படையினர் ஆற்றிய சிறந்த பணிகளை மன்னார் மறைமாவட்ட குருப்பிரசாதிகள் மேற்பார்வையாளர் வண. பிதா லூயிஸ் பொன்னையா அடிகளார், அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகையா மடு முகாம் அரசினர் மருத்துமனையின் பொறுப்பதிகாரி ஆகியோரும் தங்களின் பாராட்டுதல்களையும் நன்றியையும் குறிப்பேட்டில் பதிவு செய்ததன் மூலம் தெரிவித்துள்ளனர்.

# "கைதானவர்களை உடன் விடுதலை செய்க"

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''அண்மையில் கைது செய்யப்பட்ட மாணவர்களையும் இளைஞர்களையும் உடனடியாக விடுதலை செய்யும்படி வலியுறுத்துகிறோம். அநியாயமான முறையில் மாணவர்களை கைது செய்வதன் மூலம் அவர்களை தீவிரவாதிகளாக்கி நிலைமையை மேலும் மோசமாக்கவேண்டாம்.''

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. டி. எஸ், கே. வணசிங்கா, சங்கப் பணிமனையில் நடந்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கமிட்டி கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

''இலங்கை வாழ் தமிழ்மக்களின் அரசியல் பொருளாதார நிலைமை மென்மேலும் மோசமடைந்து வருவதனை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வரும் நாம், முன்பிலும் பார்க்கப் பன்மடங்கு இப்பிரச்னையில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிறோம்,

''அண்மைக்காலத்தில் தமிழ்மக்களின் உயிர் அநியாயமாக பறிக்கப்படுகிறது. உடமைகள் அழிக்கப்படுகின்றன. மிக மோசமாகப் பலர் தாக்கப்படுகின்றனர். மாணவர்கள், இளைஞர்கள் கண்டபடி கைது செய்யப்பட்டுப் பல்வேறு துன்பங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர். இவைகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேற்படி பாதிப்புக்குள்ளான அனைவருக்கும் போதிய நஷ்டஈடு வழங்கப்படுதல் வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம்.

''ஆறு மாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு இன்றுவரை நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படாத ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் உட்பட அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு அரசைக் கோருகிறோம்.

''தமிழ்மக்களின் பிரச்சனை நாளாந்தம் சிக்கலாக்கப்பட்டு வருவதை மிக ஆழமாகக் கவனித்துவருகிற நாம் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு உடன் தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இதற்கு முன்னோடியாக பயங்கரவாததடைச் சட்டம் உடனடியாக மீளப்பெறப்படுவதுடன் தமிழ் மண்ணிலிருந்து இராணுவம் அகற்றப்படல் வேண்டும்''

## விசாரணையின் பின் விடுதலை

(வவுணதீவு)

வலைகட்டிறவு பாதையின் மோட்டார் இயந்திரக் கொள்ளை தொடர்பாக விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த காவலாளியும், இயக்குனரும் பொலிஸ் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்,

இயந்திரம் கொள்ளை போனதால் பொதுமக்கள் பிரயாண வசதியின்றி பெரிதும் கஷ்டமனுபவித்து வருகின்றனர். இதன் எதிரொலியாக மீன் பிடித்தோணி மூலம் பிரயாணம் செய்தபோது நீரில்மூழ்கி ஒருவர் பலியானது குறிப்பிடத்தக்கது.

## உயர் பட்டம் பெற்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு நடாத்தி முடித்த திரு. எஸ். ஆர். கிருஷ்ணராசா, கொழும்பு பல்கலைக் கழகத்தினால் உயர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கத்தின் மேற்பார்வையில் ஆராச்சிகளை நடத்தி விலங்கியல் உயர் பட்டம் [எம்.பில்] பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. கிருஷ்ணராசா, ஒரு பேராதனைப் பல் கலைக்கழக பட்டதாரியும், பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய முன்னைய விஞ்ஞான ஆசிரியருமாவர்.

## நடமாடும் வைத்தியசாலை ஆரம்பம்

[கிளிநொச்சி]

உணவு போசாக்கு திட்டத்தின் கீழ் ஆரம்பித்துள்ள நடமாடும் வைத்தியசாலை மூலம் பின் தங்கிய கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் அநேக நன்மை அயைக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நடமாடும்வைத்தியசாலை ஒன்றை வைத்திய வசதிகளற்ற பின்தங்கிய கிராமமாகிய அம்பாள் குளம் கிராமத்தில் ஆரம்பித்து வைப்பதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றன் என்று அரசாங்க அதிபரும் கிளிநொச்சி மாவட்ட உணவு போசாக்குத் திட்ட தலைவருமான என். ஜெயநாதன் குறிப்பிட்டார்.

# யாழ். நகரில் கல்விபெறும் தூரஇட மாணவர் சொந்த ஊரில் பயில விரும்புகின்றனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள கல்லூரிகளில் பயின்றுவரும் தூர இடங்களைச் சேர்ந்த மாணவர்கள், பாதுகாப்புக்கருதி சொந்த இடங்களில் கல்வி கற்க விரும்புவதாகக் கூறப்படுகிறது.

தூரஇடத்தைச்சேர்ந்த இம் மாணவர்கள் பரீட்சை யொன்றின் மூலமே யாழ். நகரிலுள்ள தெரிவு செய்யப்பட்ட கல்லூரிகளில் இடம் பெற்றனர்.

யாழ். நகரில் தற்போதுள்ள பதட்ட நிலைமையினாலும், போக்குவரத்தின்போது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாததினாலும் பாடசாலை பஸ் சேவை ஒழுங்காக குறிப்பிட்ட நேரத்திற்கு நடைபெருததினாலும் சொந்த ஊரில் பயில இம்மாணவர்கள் விரும்புகின்றனராம்.

பெற்றோரும் பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருதி இதனை ஆதரிப்பதாக கூறப்படுகிறது.

யாழ். நகரிலுள்ள கல்லூரியொன்றைச் சேர்ந்த சில மாணவர்கள் பாதுகாப்பைக் கருதி சொந்த ஊரிலுள்ள பாடசாலைகளுக்கு மாறியுள்ளதாகக் கூறப்படுகிறது. (க)

### ஒய்வூதியம் பெறத் தவறியவர்களுக்கு

## தபால் நிலையங்களில் வழங்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் கடந்த இரு தினங்களாகச் சுமார் 400 பேருக்கு மேல் ஒய்வூதியம் வழங்கப்பட்டது. நேற்றுமுன் தினம், வல்வெட்டித்துறை பருத்தித்துறை கரவெட்டிப் பகுதியிலுள்ளவர்களுக்கும், நேற்று ஊர்காவற்றுறை, சுன்னாகம், கரவெட்டியிலுள்ளவர்களுக்கும் ஒய்வூதியம் வழங்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை 6 மணிக்கு முன்னரே ஒய்வூதியம் பெறுவோர், விளையாட்டரங்கிற்குள் சென்று ஒரே கியூவரிசையில் அமர்ந்துவிட்டனர். காசு வழங்கும் உத்தியோகத்தர்கள் வந்த பின்னரே தங்கள் தங்கள் பகுதியாகப் பிரிந்து நின்றனர். உதவிக்கு வந்தவர்கள் எவரும், விளையாட்டு அரங்கிற்குச் செல்லவில்லை.

ஒய்வூதியக்காரர் தினமும் குடிநீர் வசதியின்றிக் கஷ்டப்பட்டு வருகின்றனர். சிலர் போத்தல்களில் தண்ணீரும், சோடாவும் கொண்டுவந்திருந்தனர்.

நேற்றுக் காலை ஒய்வூதியக்காரர் தனித்தனி வரிசைகளில் சென்று ஒய்வூதியம் பெற்றனர். உதவிக்கு வந்தவர்கள் வெளியில் காத்திருந்தனர்.

துரையப்பா விளையாட்டு அரங்கில் இன்று கடைசி தினமாக ஒய்வூதியம் வழங்கப்படவிருக்கிறது. இன்று அச்சுவேலி, பருத்தித்துறை, சுன்னாகம், ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள ஒய்வூதியக்காரருக்கு இரண்டாவது தினமாக ஒய்வூதியம் வழங்கப்படும்.

தவிர்க்கமுடியாத காரணங்களினால் துரையப்பா விளையாட்டு அரங்கில் குறித்த தினத்தில் ஒய்வூதியம் பெருதவர்களுக்கு அவர்கள் ஏற்கனவே ஒய்வூதியம் எடுத்துவந்த தபால் கந்தோர்களில் ஒய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

### வன்செயலால்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

சேகரிக்கப்பட்ட இந்தநிதி, அண்மையில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட இடங்களான மன்னார், வல்வெட்டித்துறை, அச்சுவேலி, கரணவாய்தெற்கு ஆகிய பகுதி மக்களின் நிவாரணத்துக்காகச் செலவிடப்பட்டு வருவதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிவாரணத்துக்கென நிதி கோரிவந்த மாணவர் அமைப்பு பிரதிநிதிகளுக்கு மனங்கோணுது தாராளமாக நிதி வழங்கிய பொதுமக்களுக்கும் மாணவர் அமைப்பு நன்றி தெரிவித்துள்ளது.

### பொதுமக்களுக்கு, அறிவிப்பு

பொதுமக்களிடமிருந்து நிதி சேகரிப்பதை யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பு நிறுத்தியிருந்ததாக ஏற்கனவே அறிவித்திருந்ததும், தமது அமைப்மைத் தொடர்புபடுத்தி 'உயர்நிலை மாணவர் ஒன்றியம்' என்னும் அமைப்பு பொதுமக்களிடமிருந்து நிதி சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளதாகவும், ஒன்றியத்தின் நடவடிக்கைக்கும, தமது அமைப்புக்கும் எவ்விதத் தொடர்புமில்லை யென்றும் யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு அவ்வறிககையில் தெரிவித்துள்ளது. (மா)

## இப்படியும் நடக்கிறது

திரு. குயிடோ இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர் இவருக்கு வயது இருபத்து ஒன்று இருக்கும்.

ஒரு வாரத்துக்கு முன்னர் இலங்கை வந்திருந்த அவர் தமது யாழ். நண்பர்களைப் பார்க்க யாழ்ப்பாணம் வரப் புறப்பட்டார்.

இதனை சற்று விரிவாகக் கூறுவதானல்...... யாழ்ப்பாணம் நண்பர்களைப் பார்க்கத்தான் அந்த இத்தாலி இளைஞர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

பெந்தோட்டையிலிருந்து 25-08-84 என்று திகதியிட்டு அவர் தமது யாழ். ஆருயிர் நண்பருக்கு அனுப்பிய கடிதத்தின் சில பகுதிகள்:

''......உங்களை எல்லாம் நேரில் பார்த்து அளவளாவ ஆசைப்பட்டு இலங்கைக்கு ஓடோடி வந்தேன். கொழும்பு வந்து சேர்ந்ததும், உடனடியாகவே யாழ்ப்பாணம் வர விரும்பினேன்.........

''ரயில் நிலயம் சென்றேன். எத்தனை மணிக்கு யாழ்ப்பாணத்துக்கு ரயில் என்று விசாரித்தேன்.

''...என்ன யாழ்ப்பாணத்துக்கா? அங்கு ரயில் எதுவும் இப்பொழுது ஓடுவதில்லை. அநுராதபுரம் மட்டும் தான் ரயில் ஓடுகிறது...'' என்று பதிலளிக்கப்பட்டது.

''பஸ் நிலையம் சென்றேன். அதே பதில்.

''தனியார் பஸ்கள், கார்கள் பற்றி அங்கு மிங்கும் விசாரித்தேன் ரயில் நிலையத்தில் கூறியதிலும் பார்க்க பயங்கரமான காரணங்களைத் தெரிவித்து, யாழ்ப்பாணப் பகுதி மிகமிகக் கரச்சலான பகுதி என்றும், இங்கிருந்து பஸ்கள் எதுவுமே ஓடுவதில்லை என்றும் பயம்காட்டினர்!

''...என்ன செய்யலாம்? ரயில் இல்லை. பஸ் இல்லை கார் இல்லை. ... இந்த நிலையில். போக்குவரத்தே துண்டிக்கப்பட்டிருப்பதாக அச்சுறுத்தப்படும்போது நான் என்ன செய்யலாம்......? இந்தக் கடிதத்திலேயே ஆசை முத்தங்களைத் தெரிவித்து, கண் கலங்கிய நிலையில் விடைபெறுகின்றேன்...... இத்தாலியிலாவது நாம் சந்திப்போம்...'' என்று கடிதத்தில் முத்துக்களாக எழுதப்பட்டிருந்தது!

இவர் நேற்றுமுன்தினம் நாடு திரும்பிவிட்டார். இவர் ஆயிரத்தில் ஒன்றல்ல. நமக்குத் தெரியாமல் இவர் போல் எத்தனை........!

'ஊடுருவி'

## கசிப்பு உற்பத்தியை ஒழிக்க கைதடியில் எதிர்ப்பு ஊர்வலம்

(சாவகச்சேரி)

அண்மைக்காலமாக கைதடியில் நடைபெற்றுவரும் கசிப்பு உற்பத்தியையும், விற்பனையையும் ஒழிக்கும் நடவடிக்கையில் கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியம் ஈடுபட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் முதற்கட்டமாக செப்டம்பர் மாதம் 2-ம் திகதி கைதடி கிராமம் முழுவதும் 'கசிப்பு எதிர்ப்பு' ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கும் ஒன்றியம் தீர்மானித்துள்ளது

கைதடியிலுள்ள பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகள், பிரமுகர்கள், இளைஞர்கள் - யுவதிகளை உள்ளடக்கிய இவ்வூர்வலம் கைதடி கிழக்கு விநாயகர் சனசமூகநிலையத்தில் காலை ஒன்றியத் தலைவர் வே. சண்முகவடிவேல் தலைமையில் ஆரம்பமாகி நவபுரம் சனசமூக நிலையத்தில் பொதுக் கூட்டம் ஒன்றுடன் முடிவடையும்.

### பிரபல...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலுக்குள்ளாவதை யு கண்டித்து கல்லூரிகளுக்கு செல்வதற்கு அச்சம் தெரிவித்து பாடசாலைகளைப் பகிஷ்கரிப்பதாக மாணவர்கள் வெளியிட்ட துண்டுப்பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரிலுள்ள பிரபல கல்லூரிக்குச் சென்றுகொண்டிருந்த மாணவர் ஒருவர் ரோந்துப் படையினரால் கொண்டு செல்லப்பட்டு தாக்குதலுக்குள்ளான சம்பவம் குறித்து இன்று வெள்ளிக்கிழமைவரை வகுப்புகளுக்குச் செல்வதில்லையென்று அக்கல்லூரி மாணவர்கள் பிரசுரம் ஒன்று வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

''பாதுகாப்பு வேண்டி மாணவர்களே ஒரு நாள் பகிஷ்கரியுங்கள்' என்னும் பிரசுரம் ஒன்றும் நேற்று வெளியிடப்பட்டிருந்தது.

### சர்வகட்சி மாநா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு சுயாட்சி வழங்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியதாக திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு இணைந்த பிரதேச சபைகளே அமைக்கப்பட வேண்டும் என்றும் சிறிய மாற்றங்களை செய்யலாம் என்றும் தான் தெரிவித்ததாகவும் அவர் கூறினுர்.

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் ஒன்ருக இருப்பதையே விரும்புகின்றனர் என்று முஸ்லிம் லீக் தெரிவித்ததாவும் வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களும் ஒன்ருக இருப்பதையே விரும்புகின்றனர் என்று தான் அப்போது தெரிவித்ததாகவும் அவர் கூறினுர்.

### 120 இளைஞர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளாளர் திரு முருகமூர்த்தி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட 500 இளைஞர்களில் இதுவரை 195 பேரே விடுதலை பெற்று வந்திருப்பதாகவும் அவர் சொன்னுர். (மா)

### மல்லாகம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஏற்பட்ட சேதங்கள், பாதிப்புக்கள் குறித்தும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டன

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கும், சட்ட மன்றத்துக்கும் இங்கு நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து மகஜர்கள் அனுப்பி வைப்பதென்றும் சட்டத்தரணிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (மா)

## மரண அறிவித்தல்

### திரு. நாகமுத்து முருகேசு கந்தையா

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த திரு நாகமுத்து முருகேசு கந்தையா காலமானுர். இவர் திருமதி அன்னம்மாவின் அன்புக் கணவரும், கலாநிதி வேலாயுதபிள்ளை, திருமதி தவராணி மகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மனேஸ்வரி, மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனுரும், சுதாமதி, அமரநாதன், சைலேந்திரன், முரளிதரன், கோபிமனோகரன், கணேசானந்தன், தூநகை, பன்மொழி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை 1-9-84 காலை 10 மணிக்கு உரும்பிராயில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

1523

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் ஜீவரத்தினம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் இருபாலை ரேட்டில் வசிப்பவரும், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளருமாகிய வைத்திலிங்கம் ஜீவரத்தினம் 29 - 8 - 84 இல் சிவபதமடைந்தார். அன்னுர் வைத்திலிங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் இராஜலட்சுமியின் அன்புக்கணவரும் வத்சலா (லண்டன்) ஜீவராஜ் (சீமெந்துத் தொழிற்சாலை) தேவிகா, சாமளா, தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசோதி (லண்டன்) அவர்களின் அன்பு மாமனுருமாவார். அன்னுரின் இறுதிக்கிரியைகள் 2 - 9 - 84 ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு (4) மணியளவில் கோண்டாவில் கிழக்கு மயானத்தில் நடைபெறும்.

டாக்டர் V. பரராஜசிங்கம்,

மைத்துனர்.

1528

## மரண அறிவித்தல்

### A. சிவானந்தம்

சிவானந்தம் இளைப்பாறிய ஓவசியர் (புத்தளம்) காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கனகாம்பிகையின் அன்புக் கணவரும், விமலாவின் அன்புத் தந்தையும், ஸ்ரீகாந்தா, இலங்கைப் போக்குவரத்துச் சபை (ஜேர்மனி) யின் அன்பு மாமனுரும் சிவமயூரனின் பேரனுமாவார் அன்னரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை காலை (01-09-84) 9-00 மணிக்கு நீதிமன்ற வீதி, மல்லாகத்தில் இடம்பெறும். இத் கவலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

விமலா ஸ்ரீகாந்தா, நீதிமன்ற வீதி, மல்லாகம்.

29-08-84

1534

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.